a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

ஜனவரி 2012 January | இதழ் 252 ISSUE

# தமிழர் தகவல்

## TAMILS' INFORMATION

எஸ் ஜெகதீசன்



ஜனவரி 13 முதல் 15 வரையான நாட்களை மார்க்கம் நகரசபையும் தைப்பொங்கல் தினமான ஜனவரி 14ஆம் திகதியை பிக்கரிங் நகரசபையும் தமிழர் மரபுரிமை நாட்களாகப் பிரகடனம் செய்துள்ளன.

வீசிய விதைகளின் வேர்களில் முளைத்த வியர்வைப் பூக்களின் தேசியத் திருவிழா!

21 வது ஆண்டு th Year

a monthly information digest
இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

Growing with the Community ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து **From the Editor**


தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991



P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca



தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்


## சந்தர்ப்பம் எங்களுக்கானது!

ஒரு வருடம் என்பது ஒரு மாதம் போல ஓடி மறைந்து விடுகின்றது. இந்த நூற்றாண்டின் இரண்டாவது தசாப்தத்தின் முதல் வருடத்துக்கு விடைகொடுத்தாகி விட்டது.

'மிலேனியம்' பிறந்தது நேற்றுப்போல இருக்கிறது. அந்தப் பிறப்பு உலக அழிவுக்கான நாள் என்று அறிவிக்கப்பட்டதும், மக்கள் மத்தியில் விளைந்த பயங்கரப் பீதியும் மறக்க முடியாதவை.

இப்போதும் அப்படியான ஒரு செய்தி பரவ விடப்பட்டுள்ளது. 2012ல் உலகம் அழியப் போவதாக ஓடித்திரியும் செய்திக்குச் சில ஊடகங்கள் அதீத முக்கியத்துவம் கொடுத்து பயப்பிராந்தியை ஏற்படுத்த முனைகின்றன.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் 'உலகம் அழியப்போகிறது" என்பது எந்தளவிலும் அவர்களுக்கு பாதிப்பைக் கொடுப்பதாகத் தெரியவில்லை.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அழிவையே தொடர்ந்து சந்தித்த அவர்கள் மனம், வைராக்கியம் அடைந்துவிட்டது போலும்!

1958, 1977, 1983 என்ற ஆண்டுகளைக் கடந்து நித்தம் நித்தம் வீட்டு முற்றத்தில் மரணத்தை எதிர்கொண்ட இவர்கள், முள்ளிவாய்க்காலுக்குப் பின்னர் அதனிலும் மேலாக இனி என்ன அழிவை சந்திக்கப் போகிறார்கள்?

இடப்பெயர்வும் புலப்பெயர்வும் ஈழத்தமிழர்களுக்கு பழகிப்போய் விட்டன. அதற்கூடாக வந்த திடம் எந்த மண்ணிலும் வாழலாமென்ற ஓர்மத்தை அவர்களுக்குள் விதைத்து விட்டது.

இதுவே அவர்களின் நிகழ்கால செயல்களை வலுவூட்டுவதாக அமைந்துள்ளது. அதனாற்தான் புகலிடத் தமிழரை நசுக்கவேண்டும் என சிங்கள அரசு முனைகின்றது. பல வழிகளாலும் அதற்கான வளையங்களை உருவாக்குகின்றது. இறுதியில், 'புலம்பெயர்ந்த புலிகள்' என பட்டமும் சூட்டியுள்ளது.

சர்வதேச சமூகம் இலங்கையின் பாட்டுக்கு ஆடும் காலம் மாறிவருகிறது. மேற்குலகின் அழுத்தத்துள் சிக்கியுள்ள இலங்கை அதிலிருந்து மீளமுடியாத நெருக்கடிக் காலமாக 2012 அமையப்போகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி, மாறியுள்ள உலக நிலையுடன் சேர்ந்து காய்களை நகர்த்துவோம் என புத்தாண்டில் உறுதி கொள்வோம்!

திரு எஸ். திருச்செல்வம்


தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca



**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editor**
Quintus Thuraisingam

**General Manager**
S.T. Singam

**Circulation Manager**
R. R. Rajkumar

**Public Relation**
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

# 21வது ஆண்டு பூர்த்தி மலர் வெளியடும் விருதுகள் வழங்கலும் பெப்ரவரி 12ஆம் திகதி

தமிழர் தகவலின் 21வது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீடும், வருடாந்த விருதுகள் வழங்கும் வைபவமும் இணைந்த நிகழ்வு அடுத்த மாதம் (பெப்ரவரி) 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ரொறன்ரோ நகர மண்டப அங்கத்தவர் சபா பீடத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் சரியாக பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வு ஐந்து மணிக்கு முடிவுறும். முதல் அமர்வில் 21வது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீடு இடம்பெறும். இரண்டாவது அமர்வு விருதுகள் வழங்கும் வைபவமாக நடைபெறும்.

முன்னைய ஆண்டுகளைப்போன்று இவ்வருட விழாவிலும், சமூக சமய மற்றும் பொதுச்சேவை, எழுத்துப்பணி, கலைப்பணி ஆகியவற்றுக்கான விருதுகளுடன் இளையோர்/மாணவர் திறமை விருதுகளும், வாழ்நாள் சேவையாளர் விருதும் வழங்கப்படவுள்ளது.

அழைக்கப்படுபவர்கள் மட்டுமே விழாவில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர். இவர்களுக்கான அழைப்பிதழ்கள் இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

விழாவில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் 416 920 9250 இலக்கத்தைத் தொடர்பு கொண்டு தங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பெயரையும் பதிவு செய்தால், தாமதமின்றித் தொடர்பு கொண்டு அழைப்பிதழ் கிடைக்க ஒழுங்கு செய்யப்படும்.

முதன்மை ஆசிரியர்
தமிழர் தகவல்

# இலங்கை அரசின் போர்க்குற்றங்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் எதிரான கனடாவின் கடும்போக்கு தொடர்கிறது!

**Canadian Foreign Minister John Baird says he is proud of his stand on Sri Lanka's government for not adequately investigating alleged atrocities by its military forces when they annihilated the Tamil Tigers in May 2009.**


John Baird

இலங்கை அரசாங்கத்தின் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களில் கனடிய அரசாங்கம் எடுத்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று தெரிவித்துள்ள கனடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயர்ட், இந்த முடிவையிட்டுத் தாம் பெருமையடைவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கூட்ட வேளையில் முதன்முறையாக இலங்கை தொடர்பான கனடாவின் கருத்து வெளிவரத் தொடங்கியது.

அதனைத் தொடர்ந்து, ஆஸ்திரேலியாவில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின்போது கனடியப் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் கனடாவின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தி, 2013ஆம் ஆண்டில் இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடைபெறுவதற்கான தமது எதிர்ப்பைப் பகிரங்கமாக வெளிப்படுத்தினார்.

இலங்கை ஜனாதிபதி நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வாயிலான மனித உரிமை மீறல்களுக்குப் பரிகாரம் கிடைக்குமென்று இலங்கை அரசு உத்தரவாதம் வழங்கியதால், அந்த அறிக்கை வந்தபின் தாங்கள் கலந்து கொள்வது தொடர்பான முடிவு எடுக்கப்படுமென கனடாவும் பிரிட்டனும் அங்கு தெரிவித்தன.

கடந்த மாதம் இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை ஒரு பம்மாத்து என்பதை உலக நாடுகள் இப்போது புரிந்து கொண்டுள்ளன. அமெரிக்காவும் கனடாவுமே முதலில் தங்களின் கருத்தை வெளிப்படுத்தின.

"மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆணைக்குழு கவனிக்கத் தவறிவிட்டது, இதனால் இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று இலங்கையிலுள்ள கனடிய உயர் ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் ஜோன் பெயர்ட், 2009 மே மாத யுத்த இறுதியில் படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களை இலங்கை அரசு சரியாக விசாரிக்கத் தவறிவிட்டது என்று சுட்டிக்காட்டியுள்ளதுடன், இவ்விடயத்தைக் கனடா தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவிலுள்ள இலங்கைத் தமிழர்களின் வாக்குகளை இலக்கு வைத்தே கனடிய அரசு இப்படியான நிலைப்பாட்டை எடுத்திருப்பதாகச் சிலர் குற்றஞ்சாட்டியுள்ளதற்குப் பதிலளித்துள்ள அமைச்சர் பெயர்ட், "கடந்த மே மாதத் தேர்தலுக்கு முன்னர் நாங்கள் இந்த நிலைப்பாட்டை எடுக்கவில்லையே" என்று பதிலளித்துள்ளார்.

இந்த வருட மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை அரசுக்கு எதிராகக் கடுந்தொனியிலான தீர்மானமொன்றைக் கொண்டுவர மேற்குலகும் மனித உரிமை அமைப்புகளும் இணைந்து நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளன.

2012ஆம் ஆண்டு இலங்கை சர்வதேச நெருக்கடிக்கு முகம் கொடுக்க முடியாது தவிக்கும் 'தீயணைப்பு ஆண்டாக' அமையுமெனப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

2001ஆம் ஆண்டுக்கும் 2010ஆம் ஆண்டுக்குமிடைப்பட்ட பத்து ஆண்டுகளில் ரொறன்ரோ நகரில் 683 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஆகக்கூடிய கொலைகள் (86 பேர்) 2007ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு ஆண்டிலும் சராசரியாக அறுபது கொலைகள் இடம்பெற்றுள்ளன. துப்பாக்கி மற்றும் கத்தி ஆகிய ஆயுதங்களே கூடுதலாக கொலைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கனடாவில் புதிய குடிவரவாளர்களினதும் அகதிகளினதும் பிள்ளைகளே அதிகளவில் 'விற்றமின் டி' குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையொன்று தெரிவிக்கின்றது. 7 வயதுக்கும் 11 வயதுக்குமிடைப்பட்ட பிள்ளைகள் தொடர்பான தகவல் சேகரிப்பின்படி, கனடியப் பிள்ளைகளில் 14 வீதமானோர் மட்டுமே விற்றமின் டி குறைவாக உள்ளனர். ஆனால் அகதிகள்/புதிய குடிவரவாளரின் பிள்ளைகள் 82 வீதமாக உள்ளனர்.

ரொறன்ரோ நகரசபையின் 2388 பணியாளர் இடங்களை ஒழிப்பதற்குரிய திட்டத்தை நகராட்சி நிர்வாகம் பகிரங்கப்படுத்தியுள்ளது. அடையாளம் காணப்பட்டுள்ள 2388 பணியிடங்களில் 1148 ஏற்கனவே வெற்றிடமாகியும் நிரப்பப்படாமலுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பணியிடங்களை ஒழிப்பதன் வாயிலாக 88 மில்லியன் டாலர்களை மீதப்படுத்த முடியுமென்று ரொறன்ரோ நகர முதல்வர் றொப் போர்ட் மதிப்பிட்டுள்ளார்.

மதுபோதையில் வாகனங்களை ஓட்டியமைக்காகத் தண்டிக்கப்பட்ட பல சாரதிகள் மீண்டும் அதே குற்றத்துக்காக அகப்படுவது அதிகரித்தது வருவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். சாரதி அனுமதி இடைநிறுத்தி வைக்கப்பட்டவர்கள்கூட மதுபோதையில் வாகனம் செலுத்துகையில் மீண்டும் அகப்பட்டுள்ளனர். இதனால், இந்தக் குற்றத்துக்கான தண்டனையை அதிகரிக்கலாமா என்று கனடிய அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

எலிசபெத் மகாராணியின் வைரவிழாவை வெகுவிமரிசையாகக் கொண்டாட பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் பல நாடுகள் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன. இந்த வருடத்தின் நடுப்பகுதியில் இதனையொட்டிய பல நிகழ்வுகள் கனடாவின் பல பகுதிகளிலும் நடைபெறவுள்ளன. கனடியப் பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்கக்கூடியதாக வைபவங்களை ஏற்பாடு செய்வதற்குப் பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் (2011 டிசம்பர்) 23ஆம் திகதி - அதாவது நத்தார் தினத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் ஒன்ராறியோ 'குடி'மக்கள் ஒரு சாதனை நிகழ்த்தியுள்ளனர். 51 மில்லியன் டாலருக்கு இவர்கள் மதுபானங்களைக் கொள்முதல் செய்துள்ளதாக LCBO அறிவித்துள்ளது. 2010ஆம் ஆண்டின் இதே நாளில் 48 மில்லியன் டாலர்களுக்கு ஒன்ராறியோவில் மதுபான விற்பனை இடம்பெற்றுள்ளது.


கனடாவின் மற்றைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் ஒன்ராறியோ மாகாண வாகன உரிமையாளர்களே அதிகூடிய பணத்தை வாகனக் காப்புறுதியாக செலுத்துகின்றனர். இங்கு வாகன விபத்துத் தொடர்பான சட்ட நடவடிக்கைகளின்போது பெருமளவு பணம் காயமடைந்தவர்களுக்குச் செலவிடப்படுவதாகவும், பல மோசடிகள் இதில் இடம்பெற்றுள்ளதாகவும் மாகாண கணக்காளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

கனடாவின் சர்வதேச விமான நிலையங்களில் ஒன்றான ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தை ரொறன்ரோ நகரின் மையத்தில் அமைந்துள்ள யுனியன் ரயில் நிலையத்துடன் இணைக்கும் ரயில் பாதையை அமைக்கும் பணிக்கு ஒன்ராறியோ மாகாண அரசு பச்சைக்கொடி காட்டியுள்ளது. 23.3 கீலோ மீட்டர் தூரமான இந்தப் பாதையில் 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் ரயில்கள் ஓடுமென்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

## பிக்கரிங் நகரசபையும் தமிழர் நாள் பிரகடனம்

இந்த வருட ஜனவரி 14ஆம் திகதி பொங்கல் திருநாளை பிக்கரிங் நகரசபையும் தமிழர் மரபுரிமை நாளாகப் பிரகடனம் செய்துள்ளது.

## 2011ஆம் ஆண்டில் செய்தியின் முன்னணியில் ஜாக் லேட்டன்



கடந்தாண்டில் (2011) கனடியப் பிரமுகர்களிடையே செய்தியில் முன்னணியில் நின்றவராக என். டி. பி. தலைவராகவிருந்த ஜாக் லேட்டன் தெரிவாகியுள்ளார். கடந்தாண்டு மே மாதம் இரண்டாம் திகதி நடைபெற்ற கனடிய பொதுத் தேர்தலில் "பிரதமர் பதவிக்குப் போட்டியிடுகிறேன்" என்று துணிச்சலாக் கூறியவாறு தமது கட்சியை முன்னிறுத்திய இவர், முதன்முறையாக என். டி. பி கட்சியை உத்தியோகபூர்வ எதிர்க்கட்சி அந்தஸ்துக்கு வெற்றியடையச் செய்தார். இதனால் கனடிய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவி இவருக்குக் கிடைத்தது. ஆனாலும் புற்று நோய் காரணமாக செப்டம்பரில் மரணமான ஜாக் லேட்டனுக்கு பூரண அரசாங்க மரியாதையுடன் இறுதி மரியாதை வழங்கப்பட்டது. இதனால் கடந்தாண்டு முழுவதும் கனடிய ஊடகங்கள் அனைத்தையும் தம்வசப்படுத்தியவராக விளங்கிய ஜாக் லேட்டன் செய்திகளை உருவாக்கி செய்தியில் முன்னணியில் திகழ்பவராகத் தெரிவாகியுள்ளார். (இவரது மறைவைத் தொடர்ந்து என். டி. பியின் செல்வாக்கு சரிந்து வருவது குறிப்பிடத்தக்கது).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி 13-15 வரை தமிழர் மரபுரிமை நாட்கள் மார்க்கம் நகரசபை பிரகடனம்

# Markham Town Council proclaimed Tamil Heritage Days: Jan. 13-15

2011 மார்கழித் திங்கள் 13ஆம் நாள் மார்க்கம் நகரமண்டபத்தில் நடைபெற்ற நகராட்சிமன்றக் கூட்டத்தில் 2012 ஜனவரி 13, 14, 15ஆம் நாட்களைத் தமிழர் மரபுநாளாக ஏற்றுக்கொள்வதாக முடிவெடுக்கப்பட்டு பிர-கடனம் செய்யப்பட்டது. தமிழர் மரபுநாளைக் கனடாவில் முதன்முதலாக அடையாளப்படுத்திய மார்க்கம் நகரசபைக்கு மார்க்கம் தமிழர் அமைப்பு நன்றி கூறுகிறது. அத்துடன் இம்முயற்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக முன்னின்று உழைத்த மன்ற உறுப்பினர் திரு. லோகன் கணபதி அவர்கட்கும் மார்க்கம் தமிழர் அமைப்பு, தமிழ்மக்கள் சார்பில் தனது நன்றியறிதலை வெளிப்படுத்துகிறது.

இலங்கை இந்தியா போன்ற கீழைத்தேச நாடுகளிற் தைத்திங்கள் அறுவடைகாலமாகக் கொள்ளப்படுகிறது. அக்காலத்தில் கதிரவனுக்கும் கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் விழாவான பொங்கல்விழா கொண்டாடப்படுகிறது. இப்பொங்கல் விழா உலகெங்கும் வாழும் தமிழர்களால் மதஉணர்வுகளைக் கடந்து கொண்டாடும் நிகழ்வாக அமைகிறது. செல்வச் செழிப்புடன் விளங்கும் இத்தைத்திங்களில் விவசாயிகள் வீடுகளில் திருமணம் போன்ற புனிதமான நிகழ்வுகள் நடைபெறுவதும் வழக்கம்.

தைமுதலாம் நாள் தமிழரின் ஆண்டுத் தொடக்க நாளாகக் கொள்ளப்படுகிறது. இது தமிழர்களாற் சிறந்த புலவராகவும் தத்துவஞானியாகவும் போற்றப்படும் திருவள்ளுவர் அவர்களது பிறந்த நாளிலிருந்து கணிக்கப்பட்டு உலகமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கொண்டாடப்படுகிறது. 'என்றும் வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பினராக விளங்கும் எமது மார்க்கம் மேயருக்கும் நகரமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நன்றியை வெளிப்படுத்துகிறேன்' என்று மார்க்கம் நகர-சபையின் 7ஆம் வட்டார உறுப்பினராகிய திரு. லோகன் கணபதி அவர்கள் கூறினார். அத்துடன் அவர், 'மார்க்கம் நகரசபையின் இம்முடிவானது தமிழ்க் கனேடியர்களைப் பொறுத்தமட்டில் ஒரு வரலாற்றுப் பதிவாகவும் அமைந்துள்ளது' என்றும் குறிப்பிட்டார்.

தமிழர் மரபுநாள் இணைப்புக்குழுவின் தலைவர் திரு. நீதன் சண் அவர்கள் இதுகுறித்துக் கூறும்போது, 'மார்க்கம் நகர-சபையின் இதுபோன்ற செயற்பாடுகள் ஏனைய நகரசபைகட்கும் ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது' என்று குறிப்பிட்டார். மேலும் அவர், கனடாவிற் தமிழர் பல்லினக் குழுமங்களுடன் இணைந்து தமிழர்தம் மரபுகளையும் வரலாற்றுப் பெருமைகளையும் மதித்துப் போற்றுவர்' என்று, தான் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

'மிகக் கூடியஅளவில் தமிழ்மக்கள் செறிந்து வாழும் மார்க்கம் நகரசபை எடுத்த இம்முடிவானது மிகவும் பொருத்தமானது' என்று மார்க்கம் தமிழர் அமைப்பைச் சேர்ந்த செல்வி. வனிதா நாதன் அவர்கள் கூறினார். அத்துடன் 'இம்முடிவானது தமிழ்க் கனேடியர்கள் ஒன்றிணைந்து பொங்கலைக் கொண்டாடவும், ஏனைய பல்லின மக்களுடன் இணைந்து தமிழர் மரபுநாட் சிறப்பைப் பகிர்ந்துகொள்ளவும் வாய்ப்பளிக்கும்' என்றும் கூறினார்.

During a regular council meeting at Markham Civic Centre, Markham Town Council proclaimed January 13, 14 and 15 as 'Tamil Heritage Days', effectively becoming the first Municipality in Canada to recognize Tamil Heritage Days.

January is a time of harvest for farmers in countries like India and Sri Lanka. Thai Pongal is a celebration that offers thanks to the sun and cattle for a good season and abundant harvest. Thai Pongal is celebrated by members of the Tamil community all around the world, irrespective of their religion. January is also considered to be an auspicious month to celebrate weddings as farmers are often in possession of wealth due to a good harvest.

Thai Pongal also marks the first day of January as per the Tamil calendar which is calculated based on the birth of Thiruvalluvar, a celebrated poet and philosopher by Tamils all over the world.

"Our Mayor and members of Council have always embraced the growing diversity in the Town of Markham. I'm honored and privileged to have been able to contribute to preserve the Tamil Heritage", remarked Ward 7 Councilor Logan Kanapathi. "Today is another historical day for Tamil Canadians and Markham is the only municipality in Canada to have passed proclamation of this kind."

"The Town of Markham has always been a leader in such initiatives and has become a role model for other municipalities", said Neethan Shan, Chair of Tamil Heritage Coordinating Committee. "We hope that others recognize the historical and traditional value that Tamil Canadians add to the multicultural mosaic of Canada and hope that others will follow suit", added Shan.

"This proclamation is very fitting since Markham is home to a large percentage of Tamil Canadians", said Juanita Nathan of the Markham Tamil Organization. "It will also provide an opportunity for Tamil Canadians to gather, celebrate and also share the richness of the Tamil culture with their fellow Markham residents", added Nathan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் து. சூரியபாலன்

# இரத்தக் குழாய்கள்: தடைபடும் காரணமும் தவிர்க்கும் வழிகளும்

கடந்த மாதத் தொடர்ச்சி

இதுவரை LDL ஐ ஈரல் உணவு வகைகளில் இருந்து தயாரிக்கின்றது எனப் பார்த்தோம். சிலவேளைகளில் ஈரல் மிக மிக அதிகமான LDL ஐ தயாரிக்கின்றது. இது ஒரு பரம்பரை வியாதி. அதாவது Genetic disorder. இந்த வருத்தத்தை Familial Hyper Cholesterolemia என்று கூறுவர். Hyper Cholesterolemia என்றால் இரத்தத்தில் கூடியளவு கொழுப்பு காணப்படுகின்றது என்று அர்த்தம். Familial என்றால் குடும்பரீதி என்று கூறப்படும். இப்படிப்பட்ட வருத்தத்தை உடையவர்கள் மிக இளமையான வயதில் மாரடைப்பு போன்ற நோயால் இறக்கக்கூடும். அடுத்ததாக, இரத்தக் குழாய்கள் தடைபடுவதற்கு மூல காரணமாக மற்றைய காரணிகளைப் பற்றிப் பார்ப்போம். எங்களுக்கு உயர் இரத்த அழுத்தம் இருந்தும், அதேவேளை கொழுப்பும் கூடிய அளவில் இரத்தத்தில் இருந்தால் இரத்தக் குழாய்களில் Cholesterol படிவதற்குக் கூடிய வாய்ப்புகள் உண்டு. அடுத்ததாக கூறப்படும் காரணி நீரிழிவு. நீரிழிவு எங்களுடைய கொழுப்பின் அளவைக் கூட்டுகின்றது. நீரிழிவு இருப்பவர்களுக்கு இரத்தாசயம் சம்பந்தமான நோய்கள் ஏற்படுவதற்கு கூடிய வாய்ப்புகள் உண்டு. ஆண்களிலும் பார்க்க பெண்களுக்கு இந்த ஆபத்து கூடவாக இருக்கின்றது என்று மருத்துவ ஆராய்ச்சிகள் கூறுகின்றன. ஆனால் இந்த நீரிழிவால் ஏற்படும் ஆபத்து வயது கூடக்கூட குறைந்து காணப்படுகின்றது. நீரிழிவு எங்களுடைய இரத்தாசய தசைகளைப் பாதிப்பதனால், நாளடைவில் இருதய நோய் (Heart failure) வருவதற்கும் வழிவகுக்கின்றது.

இதுவரை எங்களுடைய உடலில் உள்ள காரணிகளை (Host factors) பார்த்தோம். இனி எமது வாழ்க்கை முறைகள், சூழ்நிலை என்பன போன்ற Environment factors எப்படி LDL கொழுப்பு கூடியளவில் இரத்தத்தில் கூடி, இரத்தக் குழாய்களை பாதிக்கலாம் என்பதைப் பார்ப்போம். மருத்துவ ஆராய்ச்சிகளின் படி, கூடியளவு புகைப்பதாலும், கூடியளவு உடம்பு பெருப்பதாலும் (Obesity), கூடியளவு Saturated fats, Cholesterol , உப்பு, Calories உள்ள சாப்பாட்டைச் சாப்பிடுவதாலும், தேகாப்பியாசம் இல்லாத வாழ்க்கை வாழ்வதாலும் இரத்தக் குழாய்களில் LDL கொழுப்பு படிவதற்கு நாமே உதவுகின்றோம். இதன் முடிவு தான் மாரடைப்பு. மிக அதிகமாக மது அருந்துவதால் எங்களுடைய இரத்தாசய தசைகள் தாக்கப்பட்டு, எங்களுக்கு உயர் இரத்த அழுத்தமும், Stroke உம் வருவதற்கு கூடிய வாய்ப்புகளைத் தேடிக் கொள்கிறோம். இதை அறிந்து தான் சான்றோர் 'மது அருந்தேல்' என்று கூறினார்களோ தெரியவில்லை. தேகம் பெருத்தவர்கள் அதாவது Obese people என்று ஆங்கிலத்தில் கூறுவர். இவர்களுக்கு இருதய நோய், Stroke போன்றன கூடியளவு வருவதற்கு வாய்ப்புகள் உண்டு. இப்படி தேகம் பெருத்தலால் ஏற்படும் இரத்தாசய, இரத்தக் குழாய் சம்பந்தமான நோய்கள் ஆண்களை விட பெண்களைத் தான் கூடுதலாகத் தாக்குகின்றது என்று மருத்துவ ஆராய்ச்சிகள் மூலம் அறிகிறோம். இதை சான்றோர் கூறிய 'உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு' என்னும் கூற்றின்படி அறியலாம்.

பெண்களைப் பற்றிக் கூறும் பொழுது இன்னுமொரு காரணியைப் பற்றிக் கூற விரும்புகிறோம். கருத்தடைக்காக பெண்கள் கருத்தடை மாத்திரைகளைப் பாவிக்கக்கூடும். இந்த மருந்து வகைகளில் சிலவற்றில் Oestrogen என்று கூறப்படும் Female Hormone இருக்கின்றது. இப்படிப்பட்ட Oestrogen இருக்கும் கருத்தடை மாத்திரைகளை 35 வயதிற்கு மேற்பட்ட பெண்மணிகள் பாவித்தால், அவர்களுக்கு இந்த இரத்தக் குழாய் நோய் ஏற்பட வாய்ப்புகள் உண்டு என அறிகிறோம். இதுவரை Coronary இரத்தக் குழாய்கள் தடைப்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்தோம். இனி நிவாரணங்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகள். மாமிச உணவை தவிர்ப்பது பற்றியும், மரக்கறி வகைகளையும், பருப்பு வகைகளையும் கூட உண்பதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி ஏற்கனவே கூறினோம். நாங்கள் உண்ணும் உணவு எங்களுடைய உடலையும், உள்ளத்தையும் அதற்கேற்றவாறு பண்படுத்துகின்றது. மாமிசத்தை உண்ணும் சிங்கம், புலி சீறிப் பாயும் தன்மை கொண்டதாக இருக்கின்றது. அதே வேளையில் இலைகளையும், பழங்களையும் உண்ணும் யானை எவ்வளவு சாந்தமாக இருக்கின்றது என்று பார்த்தீர்களா? மாமிச உணவு மாரடைப்பை மாத்திரமன்றி மனிதனுடைய உள்ளத்தையும் பாதிக்கின்றது என்று பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதை நினைவில் வைத்து எங்களுடைய உணவு உண்ணும் பழக்கங்களை மாற்றிக் கொண்டால் நல்லது என்று நினைக்கின்றோம்.

மேலும் நீங்கள் உங்கள் குடும்ப வைத்தியரின் மூலமாக இரத்தத்தை சோதித்து உங்களுக்கு கூடியளவு கொழுப்பு இருந்தால், சாப்பாட்டின் மூலமாக அதை குறைக்க முயல வேண்டும். அப்படிக் குறைக்க முடியாது போனால், இந்த கொழுப்பைக் குறைப்பதற்கு என்று பல வகையான மருந்துகள் இருக்கின்றன. அவற்றை குடும்ப வைத்தியர் மூலமாகவோ, Cardiologist இன் அறிவுரை மூலமாகவோ பெற்று உடல்நலம் பெறலாம். உயர் இரத்த அழுத்தம் இருப்பவர்கள் சாப்பாட்டில் உப்பைக் குறைப்பது மாத்திரமன்றி குடும்ப வைத்தியரைக் கண்டு அவர்களின் ஆலோசனையோடு இரத்த அழுத்தத்திற்கான மாத்திரைகளை எடுத்து அதை கட்டுப்படுத்த வேண்டும். இதே மாதிரி நீரிழிவு நோய் இருப்பவர்கள், சாப்பாட்டால் தங்களுடைய இரத்தத்தில் சீனியின் அளவை கட்டுப்படுத்த முடியாவிட்டால், அதற்கேற்ற மாத்திரைகளை அல்லது இன்சுலின் ஊசியை எடுத்து இந் நோயைக் கட்டுப்படுத்த வேண்டும். இனிப்புள்ள உணவை உண்ணக் கூடாது. மேலும் சிகரட் புகைப்பவர்கள் இருதய வருத்தத்தால் தாக்கப்பட்டவர்களாக இருந்தால், புகைப்பதை முழுவதுமாக நிறுத்தி விடுவதே நல்லது. குடும்ப வைத்தியரின் உதவியோடு Nickotinine patch என்ற மருந்து மூலமாக, Nickotinine withdrawal symptom இல்லாமல், இந்த புகைக்கும் பழக்கத்தை விட்டு விடலாம். தேகாப்பியாசத்தைப் பற்றி சில வார்த்தைகள்.

தேகாப்பியாசத்தை ஒவ்வொரு நாளும் செய்வதால் எங்களுடைய LDL கொழுப்பின் அளவைக் குறைப்பது மாத்திரமன்றி எங்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் HDL கொழுப்பின் அளவைக் கூட்டவும் இயலுமாக இருக்கும் என்று வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர். கடினமான தேகாப்பியாசம் நன்மை தருவதில்லை என்றும் அறிகின்றோம். விரைவாக நடப்பது (Brisk walking) ஒரு நல்ல தேகாப்பியாசம். இதை நாங்கள் Park போன்ற இடங்களிலோ, Winter காலங்களில் பெரிய Mall களிலோ செய்யலாம். ஆனால் இப்படி எந்தவிதமான தேகாப்பியாசமும் செய்ய முன், நீங்கள் இருதய நோயால் தாக்கப்பட்டவர்களாகவோ அல்லது உங்களுடைய பரம்பரையில் யாராவது இருதய சம்பந்தமான நோய்களால் தாக்கப்பட்டவர்களாகவோ இருந்தால்

(30ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# பிரத்தியேக வகுப்புகள் மாணவருக்கு அவசியமா?

இங்குள்ள பெற்றோர் தமது முதலாம் வகுப்புப் பிள்ளைகள் தொடக்கம் 12 வகுப்பு பிள்ளைகள் வரை பிரத்தியேக வகுப்புகளுக்கு அழைத்துப் போவதைச் சாதாரணமாகக் காணக் கூடியதாகவுள்ளது.

சிறுபிள்ளைகளை பிரத்தியேக வகுப்புகளுக்கு அழைத்துச் செல்வதற்கு முக்கிய காரணம் பிள்ளைகளின் வீட்டு வேலைகளை மேற்பார்வையிடவோ, உதவி செய்யவோ தமக்கு நேரம் இல்லை என்பதையே பல இளம் குடும்பங்கள் கூறுகின்றனர் (இவர்களுக்கு இவ் வகுப்புகளுக்கு கூட்டிச் செல்ல எடுக்கும் நேரம் பற்றி இவர்கள் கணக்கெடுப்பதில்லை). சின்னஞ் சிறுசுகளுக்கு பிரத்தியேக வகுப்புகள் தேவைதானா என்பது கேள்விக் குரிய விடயமாகும். எமது தாய் நாட்டில் எல்லாப் பாடங்களுக்கும் பிள்ளைகள் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்பும், பாடசாலை விட்ட பின்பும் ரியூசனுக்கு சென்றனர். இப்பொழுது பெற்றோர் ஸ்தானத்தில் இருப்போர் கட்டாயமாக இவ்வாறுதான் படித்திருப்பார்கள். இத்தகைய ஒரு பிரத்தியேக வகுப்புக் கலாசாரத்தில் (Tuition culture) ஊறிப்போன ஒரு சமூகம் எமது சமூகம். ஆகவே அதனையே எமது பிள்ளைகள் மீதும் திணிக்கிறோம்.

வீட்டு வேலை என்றால் என்ன? - அதுவும் ஒரு வாழ்க்கைத் திறன் (Life skill). ஒரு பிள்ளை சிறுபராயம் தொடக்கம் தனது ஆசிரியர் வழங்கும் வீட்டு ஒப்படைகளை தானே ஞாபகத்தில் வைத்திருந்து, வீட்டுக்கு வந்தபின்பு தான் பெற்ற அறிவை அடிப்படையாகக் கொண்டு தனது முயற்சியால் அவற்றைக் கையாளப் பழகுதல் வேண்டும். சிறு வயது முதலே இதனை ஒரு பயிற்சியாகச் செய்யும் பிள்ளைக்கு நாட்கள் செல்லச் செல்ல அது ஒரு வாழ்க்கைத் திறனாக உருவெடுக்கிறது. அதனை விடுத்து பிறரின் உதவியை நாடும் பொழுது பிள்ளைகளுக்கு அறிவு விருத்தி இல்லாமல் போவதோடு மாத்திரமல்ல, சோம்பல், அறியாமை, தங்கள் மேல் நம்பிக்கையின்மை (self-confidence) முதலியன ஏற்பட்டு இதுவே அவர்களின் பிற்கால வாழ்க்கையிலும், தொழில் துறையிலும் முன்னேற்றம் அடைய இடைஞ்சலாக அமையலாம்.

இந் நாட்டில் கல்வி அளவீடு என்பது வருடம் முழுக்க பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலேயே கணிக்கப்படுகிறது என்பதை இப்பொழுது இங்குள்ள எல்லாப் பெற்றோரும் அறிவார்கள் (summative evaluation). ஆசிரியர் தமது புள்ளிகளின் பெறுமானங்களைக் கணிக்கும் பொழுது ஒரு பகுதியை வீட்டு வேலைக்கும் வகுப்பில் பங்குபற்றலுக்கும் என ஒதுக்குகிறார்கள் (Home work and participation). சில ஆசிரியர்கள் அன்றாடம் பிள்ளைகளின் வீட்டு வேலைகளை மேற்பார்வை பார்த்து தமது புள்ளி பதியும் குறிப்பேட்டில் சாதாரண அடையாளத்தைப் போட்டு (tick mark) கடைசியாக எல்லாவற்றையும் ஆராய்ந்து அளவீடு செய்கிறார்கள். சிலர் சில வீட்டு வேலைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் போடுவார்கள். இது ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுபடலாம். ஆனால் புள்ளிகள் என்ற அடிப்படையில் மாத்திரம் கவனம் செலுத்தாது, வீட்டு வேலை செய்தால் தான் வகுப்பில் பாடங்கள் தமது பிள்ளைகளுக்கு விளங்கும் என்பதை பெற்றோர் மனதில் கொள்ள வேண்டும்.

ரொறன்ரோ கல்விச்சபை (Toronto District School Board) வீட்டுவேலை சம்பந்தமான அறிக்கையை வெளியிட்டுள்ளது (Home work foundation statement). TDSB யை பொறுத்தமட்டில் இது பெற்றோரும் பாடசாலையும் பங்குதாரராகச் (partners) செயல்படும் ஒரு நிரலாக அமைகிறது. பெற்றோரும், ஆசிரியர்களும் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் பிள்ளைகள் தமது உச்சத் திறமையை (High achievement) அடைய ஏதுவாகுமென்றும், அதன் மூலம் அவர்கள் எதிர்காலத்தில் சமூகத்திலும் பொறுப்புள்ள அங்கத்தவர்களாக மாறமுடியும் அன்று இவ்வறிக்கை கூறுகிறது.
TDSB தனது அறிக்கையில் மாணவர்களின் வகுப்புகளுக்கு அமைய வீட்டுவேலை நேரத்தை பின்வருமாறு பிரித்துள்ளது:-

| வகுப்பு | நேரம் |
|---|---|
| JK - 3ம் வகுப்பு | 10 - 30 நிமிடங்கள் |
| 4 - 6ம் வகுப்பு | 30 - 60 நிமிடங்கள் |
| 7 - 9ம் வகுப்பு | 45 - 90 நிமிடங்கள் |
| 10 - 12ம் வகுப்பு | 60 - 120 நிமிடங்கள் |

இந்த அட்டவணை கட்டாயமாக இப்படித்தான் அமையும் என்று சொல்ல முடியாது. உயர்வகுப்புகளில் உசாவுதலுக்கு அதிக நேரம் தேவைப்படலாம். வீட்டுவேலை என்பது ஒரு நான்கு அம்ச நிரலாகும். அவையாவன (1) வேலைகளைச் செய்து முடித்தல் (completion), (2) தயார்படுத்துதல் (preparation), (3) பயிற்சியும், பிரயோகமும் (Practice & Application), (4) ஆக்கபூர்வமாகவும் மேலதிகமாகவும் செயலாற்றல் (Creative extension). முதலாவதாக செய்து முடித்தல் என்பது யாதெனில் வகுப்பில் நடைபெற்றவற்றை செய்து முடித்தல் (keeping up to date). சில குறிப்புகளை வகுப்பில் எடுப்பார்கள். இரண்டு நாட்கள் கழித்து அவற்றைப் பார்த்தால் தான் எழுதியதே என்னவென்று மாணவனுக்கு விளங்காது இருக்கும். ஆகவே அன்றாடம் வகுப்பில் நடைபெற்றவற்றை மீளவும் பார்த்தல் வேண்டும், இரண்டாவதாக தயார்படுத்தல் என்பதன் விளக்கம் யாதெனில் மறுநாள் வகுப்பிற்குத் தேவையானவற்றைத் தயார்படுத்தல். வீட்டுவேலை சம்பந்தமான குறிப்புகளை மாணவர்கள் தமக்கென வழங்கப்படும் குறிப்புப் புத்தகத்தில் (Daily planner) விபரமாக குறித்து வைத்தல் வேண்டும். அவற்றை முதல் நாள் பார்த்து வேண்டிய பின்னணி அறிவினை பெற்று வீட்டு வேலை செய்வதற்குத் தம்மை தயார்படுத்துதல் வேண்டும். மூன்றாவதாக பயிற்சியும் பிரயோகமும் என்பது யாதெனில் சில விளக்கங்களை, எண்ணக் கருக்களை, கடினமான சொற்களை மீளவும் வாசித்தல், மனனம் செய்தல், உரக்க வாசித்தல் என்பதாகும். இவற்றை நன்றாக விளங்கிய பின்பு இத்திறன்களை உரிய இடத்தில் பாவித்தலாகும். நான்காவதாக ஆக்கபூர்வமாகவும், மேலதிகமாகவும் செயலாற்றல் என்பது வகுப்பில் பெற்ற அறிவினைக் கொண்டு பிரச்சனைகளைத் தீர்த்தல் (Problem solving), சூழலில் அதனைத் தொடர்புபடுத்தல் முதலியனவாகும்.

மேற்கூறிய வீட்டுவேலை சம்பந்தமான நான்கு அம்ச நிரலை நோக்கினால் இதனை ஒரு மாணவன் தானாகவே செய்தால் தான் பயன் அடையலாம். தனிப்பட்ட ஒரு ஆசிரியரிடம் பிரத்தியேக வகுப்புக்குச் செல்லும் பொழுது பாடசாலையில் ஆசிரியர் எவ்வாறு கற்பித்தார், எவற்றை மாணவரிடம் இருந்து எதிர்பார்க்கிறார் என்பதெல்லாம் பிரத்தியேக வகுப்பு ஆசிரியருக்குத் தெரியாது. ஆகவே வகுப்பில் நடப்பதை கவனமாகக் கேட்டு ஆசிரியரின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய வீட்டு வேலைகளைச் செய்தல் மாணவர்களின் வேலையாகும். TDSB அறிக்கை இதனை மாணவர்களின் பொறுப்பு என்று கூறவில்லை. மாறாக இது மாணவனினதும், பெற்றோரினதும், பாடசாலையினதும் பொறுப்பு என்கிறது. மாணவனின் பொறுப்பு என்று கூறும் பொழுது மாணவனுக்குத்தான் என்ன வீட்டு வேலையை ஆசிரியர் கொடுத்திருக்கிறார் என்பது தெரியும். ஆசிரியர்கள் வீட்டு வேலைக்கு உரியவற்றைச் செய்து முடிப்பதற்கு கால அவகாசம் கொடுப்பார்கள். விடைகளில் தமது எதிர்பார்ப்புகளைக் →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்



# மனமே! நலமா?

19

நமது மனதில் உதிக்கும் எண்ணங்கள் உயர்வாக இருத்தல் வேண்டும் என்பதே பொதுவான அடிப்படையாகும். எனினும், அந்த உணர்விற்கு இடைவிடாமல் உழைக்க வேண்டும். தன்னம்பிக்கை கொண்டு மனதில் தளர்ச்சியடையாமல் முயன்று கொண்டேயிருக்க வேண்டும்.

எண்ணங்களைச் சீராகப் பட்டியலிட்டுப் பார்த்தால் அதுவே பலனையும் தரும். எண்ணங்களை மனதில் அலசி, ஆராய்ந்து நடைமுறைச் சிக்கல்களை சிந்தித்து ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். பின்பு அக்குறிக்கோளை மனதிடம் பதிவு செய்ய வேண்டும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அந்தச் சிந்தனையிலே முழுக் கவனமும் செலுத்த வேண்டும்.

பொதுவாக ஏதாவது ஒரு காரியம் செய்யும்போது மனதில் சந்தேகம் எழுந்துவிடும். ஒரு மனநிலையோடு ஒரு முகமாக செய்யும் கருமமே நிறைவாகிறது. எமது மனத்தின் பேராற்றலை சிதைத்து விடுவதே இச் சந்தேக உணர்வுதான். இவ்வுணர்வு தோன்றி விட்டதென்றால் அது அலைஅலையாக சென்று விடுகின்றது. இதில் மிஞ்சுவது குழப்ப நிலைதான். உள்மன உணர்வின்றி வெளிமன உணர்வால் எதனையும் செய்து விட முடியாது. உள்மனம் என்பது சாதாரண வழிப்போக்கன் அல்ல. சரியான பாதையில் செல்லும் வழிகாட்டி. இதனைத் தெரிந்து கொள்ளாமல் இருந்தால் கடிவாளமில்லாத குதிரை போல் ஆகி விடுகிறோம்.

மனத்தை வெல்வது என்பது மனோவிகாரத்தை அடக்குவதேயாகும். மனத்தை வெல்வதும், வசப்படுத்துவதும் ஒன்றேயாகும். மனோவிகாரங்கள் தோன்றும் போதெல்லாம் மனம் தளர்ந்து போகும். இந்நிலையிலேயே மனம் மீண்டும் புத்துயிர் பெறுகின்றது. ஒரு பெரிய போராட்டமே நிகழ்கிறது. மனோவிகாரம் தோல்வியடையவே மனம் வென்று விடுகின்றது.

மௌன அஞ்சலிக்காக எழுந்து நிற்கும் நேரத்தில் எமது மனம் செயல்படும் விதத்தை நோக்கினால் மனத்தை அடக்குவது அல்லது வசப்படுத்துவது எவ்வளவு கடினமானதென்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஒரு சபையில் எழுந்து கண்களை மூடிக் கொண்டிருக்கும் அனைவரது மனமும் எங்கெல்லாமோ தாவிக் கொண்டிருக்கும்.

நாளை வீட்டுக்கு மோட்கேஜ் பணம் போடுவதிலிருந்து காரை கராஜுக்கு கொண்டு போகும் சிந்தனை வரை நூற்றுக்கணக்காக வந்து செல்லும். கண் மூடி நிற்பவருக்கே பல சந்தேகங்கள் எழும். யாரை யார் ஏமாற்றுகிறோம் என்று புரியாமல் போகும். ஒரு நிமிட மௌன அஞ்சலி நடைபெறும் நோக்கத்தினையே மனம் புரிந்து கொள்ளவில்லையென்றால் ஒரு முகச் சிந்தனையோ, மனதினை வசப்படுதலையோ செய்ய முடிவதில்லை.

மனதில் எழுகின்ற சந்தேகம், குழப்பம், பயம், பதற்றம், இறுக்கம், கற்பனை, பேராசை, கோபம், உணர்ச்சி எல்லாமே 'வட்டச் சுழற்சி ஓட்டம்' போன்று இயங்குகின்றன. இந்தச் சூழ்நிலையில் விழித்துக் கொள்ளும் மனமே வாழ்வினை சீராக்குகின்றது, நகர்த்துகின்றது.

'மனதினை மகிழ்ச்சியால் நிரப்புவோம்'

மீண்டும் சந்திப்போம்.

கூறுவார்கள். பொதுவாக இவற்றையெல்லாம் எழுத்து மூலமே தெரிவிப்பார்கள். இவற்றை வாசித்து விளங்காதவிடத்து நேரத்தோடு ஆசிரியரோடு கலந்தாலோசித்தல் மாணவனின் கடமை. உரிய நேரத்தில் ஒப்படையைச் சமர்ப்பித்தலும் மாணவனது கடமை. பெற்றோர் பிள்ளைகளின் கல்வியில் ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் வேண்டும். படிப்பதற்குரிய சூழலை வீட்டில் அமைத்துக் கொடுத்தல் வேண்டும். ஆசிரியரோடு நெருங்கிய தொடர்பு வைத்திருத்தல் வேண்டும். பிள்ளைகளின் நடத்தை எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதற்கு பெற்றோரே முன்மாதிரியாக அமைதல் வேண்டும். ஆசிரியரின் பங்கு மிகவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அதில் ஒவ்வொரு மாணவனினதும் சமய, கலாசார நாட்களை வீட்டுவேலை கொடுக்கும் பொழுது கணக்கில் எடுக்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. பல்கலாசார நாடாக விளங்கும் இந்நாட்டின் இம் மனப்பான்மையைப் பாராட்டியே தீரவேண்டும்.

பிரத்தியேக வகுப்புகளுக்கு மாணவர்கள் செல்ல வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது - யாரிடம் தனிப்பட்ட வகுப்புச் செல்கிறார்கள் என்பதுதான் முக்கியம். சில சமயங்களில் சில மாணவர்களுக்கு வகுப்பில் ஆசிரியர் கற்பிப்பது விளங்காமல் போகலாம், பல மாணவர்கள் மத்தியில் தமது ஐயங்களை கேட்டுத் தீர்க்கும் ஆற்றல் சில மாணவர்களுக்கு இருக்க மாட்டாது - வீட்டிலும் உயர் வகுப்பு மாணவர்களுக்கு உதவி செய்யும் திறன் பெற்றோருக்கு இல்லாமல் போகலாம். அப்பொழுது ஒரு தனிப்பட்ட போதனைக்கு மாணவர்கள் செல்லத்தான் வேண்டும். இந் நாட்டு வேலைத்திட்டம், கல்விமுறை, கற்பித்தல் திறன் இவை யாவும் அமைந்த ஒரு ஆசிரியரிடமே செல்வது நல்லது. பாடசாலைகளில் மாணவர்களால் தனிப்பட்ட போதனை வழங்கும் திட்டம் காணப்படுகிறது. வழிகாட்டி ஆலோசகர்களிடம் விண்ணப்பித்து இவ்வுதவியைப் பெறலாம். எந்த ஒரு பாடத்தையும் விளங்காதவிடத்து பாட ஆசிரியர்கள் தமது ஓய்வு நேரத்திற்கூட உதவ ஆயத்தமாக இருப்பார்கள். ஆகவே எந்த உதவியையும் சரியான முறையில் பயன்படுத்துதல் மாணவர்களின் கடமையாகும். சிறுபிள்ளைகளின் வீட்டு வேலையை கண்காணித்தல் பெற்றோரின் தலையாய கடமையாகும். இதற்கு பெரிய ஆங்கில அறிவு தேவையில்லை. உயர் வகுப்பு மாணர்கள் தாமாகவே அக்கறை எடுத்து ஒழுங்காக வீட்டு வேலைகளைச் செய்தல் வேண்டும். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு - "குதிரையை தண்ணீரருகே கூட்டிப் போகலாம், ஆனால் அதனைக் குடிப்பது குதிரையால் தான் முடியும்" என்று (you can take the horse to the water, but he has to drink it). யார் எவ்வளவு பாடுபட்டாலும் மாணவர்கள் தான் உணர்ந்து கற்றல் வேண்டும். அதனால் எதிர்காலத்தில் பயனடைபவர்களும் பிள்ளைகள் தான் என்ற உணர்வை பெற்றோர் பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்துதல் வேண்டும். வீட்டு வேலையை செய்தலும் ஒரு கட்டுப்பாடு (Discipline). சிறுவயதிலேயே கட்டுப்பாட்டுடன் பாடசாலை வாழ்க்கையை வாழத் தொடங்க வேண்டும். ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# இலவசம்

பல வருடங்களுக்கு முன்னர் ஒரு நண்பருடன் ரொறன்ரோவின் பிரபலமான பல்கடை அங்காடி ஒன்றுக்குச் சென்றேன். நண்பர் தேடிப்போன பொருள் கிடைக்கவில்லை. உடனே திரும்ப வேண்டியதுதானே. நண்பர் விளம்பரப் பலகையில் கழிவு விலையில் விற்கப்படும் சாமான்களின் விவரங்களைப் படித்து அதனால் கவரப் பட்டார். 'இரண்டு காட்டு அரிசி பக்கெட் வாங்கினால் ஒரு கத்தரிக்கோல் இலவசம்' என்றிருந்தது. யோசிக்காமலே இரண்டு பக்கெட் காட்டு அரிசி வாங்கினார். அவர்கள் இடது கைக்காரர் பாவிக்கும் கத்தரிக்கோல் ஒன்றை இலவசமாக வழங்கினார்கள். நான் கேட்டேன் 'இடதுகை கத்தரிக்கோலை வைத்து என்ன செய்யப்போகிறீர்கள்?' அவர் சொன்னார் 'ஒரு வேளை, ஒரு காலத்தில் வலது கை பழுதானால் பாவிக்கலாம்தானே.' அது ஓர் அருமையான விளக்கமாகத்தான் இருந்தது.

சில நாட்கள் சென்று காட்டு அரிசி எப்படி இருந்தது என்று கேட்டேன். 'அதையேன் கேட்கிறீர்கள்? பாக்கெட் அப்படியே இருக்கிறது. காட்டெருமைதான் அதைச் சாப்பிடும்' என்றார்.

இலவசம் என்றால் எப்படிப் பட்டவர்களும் மயங்கி விழுந்து விடுகிறார்கள். சில வாரங்களுக்கு முன்னர் சியர்ஸ் விற்பனை நிலையத்தில் நான் கண்ட ஒரு காட்சி. ஒரு தகப்பன் தன் இரண்டு பையன்களையும் அழைத்து வந்திருந்தார். இரட்டைப் பிள்ளைகள், வயது 12 - 13 தான் இருக்கும். பார்ப்பதற்கு ஒரே மாதிரி முகத்தோடு இருந்தார்கள். தகப்பனோடு உடுப்பு வாங்க வந்ததில் நெளிந்து அதிருப்தியாகக் காணப்பட்டார்கள்.

அவர்களுக்கு முதல்தரமான ஜீன்ஸ் கால்சட்டை வாங்குவதுதான் அன்றைய திட்டம். இரண்டு ஜீன்ஸ் வாங்கினால் ஒன்று இலவசம். இரண்டு ஜீன்ஸின் விலை 120 டாலர். இரண்டும் பலதடவை தோய்க்கப்பட்டு, சாயம்போய், உரிய இடங்களில் கிழிந்து காணப்பட்டன. ஒரு ஜீன்ஸ் தயாரிப்பதற்கு 2000 கலன் தண்ணீர் தேவைப்படுமாம். அந்த மனிதர் கையில் 4000 கலன் தண்ணீரை குடித்துவிட்டு இரண்டு ஜீன்ஸும் தொங்கின. ஒன்று முழங்காலில் கிழிந்திருந்தது மற்றதின் தொடையடியில் ஓர் ஓட்டை இருந்தது. இரட்டைப் பிள்ளைகள் என்ற படியால் கிழியலை வைத்து அவர்களை அடையாளம் காண உதவியாக இருக்கும்.

நீண்ட வரிசையின் கடைசியில் நான் நின்றேன். தகப்பன் விற்பனைப் பெண்ணுடன் பேரம் பேசிக்கொண்டிருந்தார். 'இரண்டு ஜீன்ஸ் வாங்கினால் ஒன்று இலவசம். எனக்கு இலவசமாக ஜீன்ஸ் வேண்டாம். அதற்கான விலையை கழித்துவிடுங்கள்' என்றார். விற்பனைப் பெண்ணுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர் ஹங்கேரிய மொழியை தலைகீழாகப் பேசியதுபோல அவரைப் பார்த்தாள். பின்னர் 'இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம். அதுதான் விதி. கழிவெல்லாம் கொடுக்க முடியாது' என்றாள். மனிதர் விடுவதாயில்லை. முழுதூரமும் போவதற்கு தயாராகவிருந்தார். 'நீங்கள் கேட்கும் விலை 120 டொலர். அதற்கு 3 ஜீன்ஸ் தருகிறீர்கள். ஒன்றின் விலை 40 டொலர். இரண்டு ஜீன்ஸுக்கு நான் 80 டாலர்தான் தருவேன்' என்று நாலாம் வகுப்பு மாணவிக்கு விளங்கப்படுத்துவதுபோல சொல்லி முடித்தார்.

இரண்டு பையன்களும் மெதுவாக நகர்ந்து தங்களுக்கும் தகப்பனுக்கும் இடையில் உள்ள தூரத்தை அதிகப் படுத்தினார்கள். அந்தப் பெண்ணைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. முதல்தரமாக இப்படியான ஒரு வாடிக்கையாளரைச் சந்தித்திருக்கிறாள். மறுபடியும் மறுபடியும் 'விலையில் கழிவுதர எனக்கு அதிகாரமில்லை' என்று கூறினாள். எனக்கு பின்னால் வரிசை வளர்ந்து கொண்டே போனது. பெண் மனேஜரை தேடிப் போனாள். தராசுபோல இரண்டு கைகளிலும் ஜீன்ஸை தொங்கவிட்டபடி இவர் அந்தப் பெண்ணிற்கு பின்னால் போனார். பிறகு நான் அவர்களைக் காணவில்லை. நீண்ட வரிசை முன்னகர்ந்து அவர்கள் நின்ற இடத்தை நிரப்பியது. 'புகுவார் அவர்பின் புகுவேன்' நான்.

எனக்கும் 2010ம் ஆண்டு காதலர் தினத்தின்போது இலவச வாய்ப்பு ஒன்று கிடைத்தது. என்னுடைய செல்பேசி நிறுவனம் அனுப்பிய குறுஞ்செய்தி. 'இந்த வருடம் காதலர் தினம் சலுகையாக உங்களுக்கு காதலியுடன் பேசுவதற்கு 100 மணித்தியாலங்கள் இலவசமாகத் தருகிறோம்.' என்னால் நம்ப முடியவில்லை. நிறுவனத்தை உடனே அழைத்தேன். 'உண்மையாக எனக்கு 100 மணித்தியாலங்கள் இலவசமாக தருகிறீர்களா?' அவர்கள் 'உண்மையாகத்தான். நீங்கள் எங்களுக்கு மிகவும் வேண்டப்பட்ட வாடிக்கையாளர்.' 'அப்படியா? தந்திரம் ஒன்றும் இல்லையே!' 'நம்புங்கள். தந்திரம் ஒன்றுமில்லை' என்றார்கள்.

என்னுடைய செல்பேசி நிறுவனத்தை எனக்கு நல்லாய்த் தெரியும். இலவசமாக ஒன்றுமே தரமாட்டார்கள். மாறாக நான் பேசாத ஆட்களுடன் பேசியதாகவும், அறிமுகமில்லாத மனிதர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பியதாகவும் மாதா மாதம் பணம் அறவிட்டு விடுவார்கள். அவர்களுடன் சண்டை பிடித்து நான் அநேகமாக தோற்பேன். சிற்சில நாட்களில் கணக்கை சரி செய்வேன். ஆகவே உறுதி செய்து கொள்வதற்காக மீண்டும் 'எனக்கே எனக்கா?' என்றேன். 'நம்புங்கள். உங்களுக்குத்தான்.' எனக்கு உடம்பு பதறியது. அவர்கள் மனம் மாற முன்னர் அத்தனை மணித்தியாலங்களையும் பாவித்துவிட முடிவு செய்தேன்.

'100 மணித்தியாலங்களையும் ஒரே மூச்சில் பேசி முடிக்கவேண்டுமா?'

'இல்லை, இல்லை. விட்டு விட்டு பேசலாம். உங்கள் விருப்பம்.'

'இன்னொரு கேள்விமட்டும் இருக்கிறது. கேட்கலாமா?'

'இதில் என்ன தயக்கம். கேளுங்கள்?'

'ஒரே காதலியுடன்தான் பேசவேண்டுமா? அல்லது வேறு வேறு காதலிகளுடன் பேச அனுமதிப்பீர்களா?'

'எத்தனை காதலிகளுடனும் பேசலாம். உச்சபட்சமாக 100 மணித்தியாலங்கள். அத்தனையும் இலவசம்.'

'தந்திரம் ஒன்றும் இல்லையே?'

'தந்திரம் ஒன்றும் இல்லை.'

'100 மணித்தியாலங்களை இலவசமாகத் தருகிறீர்கள். இத்தனை கருணை உள்ளம் கொண்ட நீங்கள் ஒரு காதலியையும் இலவசமாகத் தரலாமே!'

பெரும் சத்தத்துடன் எதிர்ப் பக்கம் டெலிபோன் வைக்கப்பட்டது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*

# இது ஒரு சின்ன விடயம்

பெருமழையின் பொழுது வாகனத்தைச் செலுத்த நேரிடின் தெளிவான பார்வைக்கு என்ன செய்யலாம் என்ற தவிப்பு சாதாரணமாக சாரதிகளிடம் தோன்றி மறைவதுண்டு.

உடனடியாக அதிவேகத்தில் துடைப்பானை இயங்க வைப்பதே தெளிவான பார்வைக்கு குழப்பமற்ற தீர்வு என்பதுதான் பரவலாக பலருக்கு அப்போதைய அபிப்பிராயமாக அமையும்.

ஆனால் அதையும் தாண்டி வேறும் ஒரு சின்ன விடயம் உள்ளது என்பது இதுவரை எவரதும் கவனத்தை கவர்ந்ததாகத் தெரியவில்லை.

இது வெறும் சின்ன விடயம்தான். எனினும் எவருக்கும் தெரியாமல் இருப்பதுதான் பெரிய விடயம்'
இது எப்படி சாத்தியம் என்பதற்குக் கூட எதுவித சான்றுகளும் உத்தியோக பூர்வமாக இல்லை.
எனினும் மழை இல்லாத நிலையில் வாகனத்தைச் செலுத்துவது போன்ற உணர்வு ஏற்படுவது இதன் மூலம் சாத்தியம் என்கின்றனர் அனுபவப்பட்டவர்கள்.

கடும் மழை என்றாலும் மங்கலாக எதையும் மறைக்காது என்பது இதன் தெளிவான ஆச்சரியம்.
இரவில் என்றாலும் பிரகாசமான பலனை அளிக்க வல்லது இது என்பது இதன் விசித்திரம்.
காவல் துறை அதிகாரிகளும் சட்டத்திற்கும் அப்பால் இதனை அங்கீகரிப்பது இதன் விநோதம்.
கோடை காலத்தில் இதனை 'கூலாக' எவருமே அணியலாம். ஆனால் மழை நேரத்தில் அணிவதற்கு மனதில் ஒரு 'தில்' அவசியம்.

வேறொன்றுமில்லை. அடைமழையின் பொழுது கறுப்புக் கண்ணாடி அணிந்து கொள்வதுதான் அந்தச் சின்ன விடயம்!

கறுப்புக் கண்ணாடி கண்களின் பாதுகாப்புக்காகவும் முக வசீகரத்துக்காகவும் மட்டுமே என்ற கருத்தை அணிந்திருந்தவர்களின் கண்கள் இதனாற்தான் தற்பொழுது மழையிலும் அதனை நாடுகின்றன.
கறுப்புக் கண்ணாடிக் கண்களுக்கு மழைத்துளிகள் வாகனத்தின் முன்கண்ணாடியில் பட்டுத்தெறிப்பது போலத் தோன்றுமே தவிர நீர்த்திரை படர்ந்து மறைப்பது போல தெரிவதில்லை. அதனால் பாதையில் நனைந்து நகரும் பிற வாகனங்களையோ அல்லது பாதையோரங்களில் வழிந்தோடும் மழைநீரையோ பார்க்க முடியாமல் போவதுமில்லை.

சாரதிகளுக்கு பயிற்சி அளிக்கும் பொழுது கறுப்புக் கண்ணாடி குறித்த குறிப்புகளை போதிப்பதற்கும் ஆலோசனைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனாலும் என்ன? கறுப்பு கண்ணாடி அணிந்தும் பாதையில் இருள் சூழ்ந்தது போல உணர்ந்தால் மேலும் முன்னேறி தடுமாறித் தவிக்காமல் மழை ஓயும்வரை பாதை ஓரத்தில் ஒதுங்குவது நல்லது.
Shades என்று அமெரிக்கர்களாலும் Sun glasses என்று இங்கிலாந்திலும் Sunnies என்று ஆஸ்திரேலியாவிலும் Cooling glasses என இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளிலும் கறுப்புக் கண்ணாடி அழைக்கப்படுகின்றது.

கிராமங்களில் முன்பு ஒரு காலத்தில் கறுப்புக் கண்ணாடி அணிந்தவர்களுக்கு நடிகர் அல்லது பிரமுகர் அந்தஸ்து கிடைக்கும் பாமரத்தனம் மிகுந்திருந்ததை நினைத்தால் சிரிப்பு வரும். ●

## பாரம்பரியக் கலைகள்: யுனெஸ்கோ பரிசீலனை

பாரம்பரிய பண்பாட்டுச் சின்னங்களாக விளங்குவதற்குரிய கலைகள் என்ற அந்தஸ்துக்கு விண்ணப்பித்துள்ள எண்பதுக்கும் மேற்பட்ட விஷயங்களை தேர்ந்தெடுப்பதில் யுனெஸ்கோ அமைப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தோனேஷியாவின் அச்சே பிராந்தியத்தில் பல காலமாக ஆடப்பட்டுவருகின்ற 'சமன்' நாட்டியம், வடகிழக்குச் சீனாவில் இருந்துவருகின்ற கதாகாலட்சேபம், இரானில் படகு கட்டுமானத்தில் இருந்து வருகின்ற பாரம்பரிய வழிமுறை போன்ற வற்றில் பாதுகாக்கப்பட வேண்டியளவுக்கு உயர்வானவை எவை என்பதை முடிவுசெய்வதற்காகத்தான் ஐ.நா. மன்றத்தின் கலாசார பாதுகாப்பு நிறுவனமான யுனெஸ்கோவின் அதிகாரிகள் சந்தித்துள்ளனர்.

யுனெஸ்கோ அமைப்புக்கு இருந்துவருகின்ற நிதி அழுத்தங்களையெல்லாம் சற்று தள்ளிவைத்து விட்டு, இந்த அமைப்பு இந்த விண்ணப்பங்களை இப்போது பரிசீலிக்கிறது. வியட்நாமின் வட மேற்குப் பகுதிகளில் சாதாரணமாக பண்டிகைகளின்போதும் திருவிழாக்களின் போதும் பாடப்படும் 'சுவன்' நாட்டுப்புறப் பாடல்கள் இந்த அந்தஸ்துக்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

சமாதானமாக வாழுதல், தேவைக்கேற்ற வானிலை வேண்டியோ, பருவ காலங்களை வருணித்தோ பாடப்படும் பாடல்கள் இவை. சுவன் நாட்டுப்புறப் பாடல்களைப் பாடக்கூடிய பெரியவர்களில் மிகச் சிலர்தான் அந்தக் கலையை அடுத்த தலைமுறைக்குச் சொல்லிக் கொடுத்திருந்தனர்.சில சங்கங்களிலும் குழுக்களிலும் இந்தப் பாரம்பரியப் பாடல்கள் பாடப்படுகின்றன என்றாலும் சர்வதேச உதவிகள் கிடைக்காமல் போனால் இந்தக் கலை விரைவில் அழிந்துபோய்விடும் என்று வியட்நாம் கூறுகிறது. பல தலைமுறைகளாக விளங்கிவருகின்ற இந்தக் கலைகள் எதிர்காலத்திலும் விளங்க வேண்டும் என உறுதிசெய்வதற்கான வழி இது என்று யுனெஸ்கோ வாதிடுகிறது.

ஆனால் இம்மாதிரியான கலைகளில் எவற்றை எல்லாம் பாரம்பரிய கலாசாரச் சின்னம் என்ற பட்டியலில் சேர்ப்பதென்பது அவ்வளவு எளிதாக தீர்மானிக்கக்கூடிய விடயமல்ல. கம்போடியாவில் நெடிய கழுத்துடைய நரம்பு வாத்தியங்களை வைத்துக்கொண்டு காவியக் கதைகளை பாடல்களாகப் பாடும் கலையை மங்கோலியாவில் அனாதையான ஒட்டகக் குட்டிகளை வேறு ஒட்டகங்கள் ஏற்றுக்கொள்ள வைப்பதற்காகப் பாடல்கள் பாடும் கலையோடு ஒப்பிட வேண்டும். ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்கள் ஏதுமற்ற
அமைதியான வாழ்கையையே
அனைவரும் விரும்புவர்.
ஆன்றோரும் சான்றோரும்
ஆதிகாலந்தொட்டு அமைதி
வழிப்பட்ட வாழ்வியல் நெறிகளையே
வலியுறுத்தி வந்திருக்கின்றனர்.



பொன்னையா விவேகானந்தன்

# ஒருவீர் ஒருவீர்க்கு ஆற்றுதிர்!

20

எனினும், இந்த உலகம் தொடக்கநாள் தொட்டு, இன்றுவரை யுத்தங்களிலேயே அழுந்திக்கிடக்கின்றது. எண்ணற்ற போராட்டங்களங்களைக் கொண்டதாகவே தமிழர் வாழ்வும் இருந்தது. ஆனாலும், கற்றறிந்த புலவோர், சச்சரவுகள் அற்ற அமைதிப்பூங்காவாகவே பூமியைப் பார்க்க விரும்பினர்.

தமிழர் பெருநிலங்களில், அரசுகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்வது வியப்பானதொன்றல்ல. அக்காலமொன்றில் வியப்பான செயல் ஒன்று நடந்தது. சோழ மன்னன் பெருந்திருமாவளவன் என்பவனும், பாண்டிய மன்னனான பெருவழுதி என்பானும் ஓரிடத்தில் ஒன்றாகக் கூடினர். ஒருவரோடொருவர் அன்பொழுகப் பேசினர். இருவருமே பெருநிலத்து மன்னர்கள். தலைமுறை வழியாக மோதிக்கொள்ளும் குலத்தினர். ஆயினும், வேற்றுமை மறந்து, தம்முள் இயைந்து மகிழ்ந்தனர்.

ஒப்பற்ற இந்தக்காட்சியை காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார் எனும் புலவர் கண்டார். உள்ளத்தில் அளவிலாத உவகை கொண்டார். அபூர்வ காட்சியல்லவா இது. எப்படிப் பாடாமற் போவது?

தன் உள்ள உணர்வை ஒப்பற்ற உயர்ந்த பாடலாக அவர்கள் முன்னே பாடிவிடுகின்றார்.

ஒருவீர் ஒருவீர்க்கு ஆற்றுதிர்' இரு வீரும்
உடன்நிலை திரியீர் ஆயின், இமிழ்திரைப்
பௌவம் உடுத்த இப்பயங்கெழு மாநிலம்
கை அகப்படுவது பொய்யாகாதே

புறம் 58

நீங்கள் இருவரும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யுங்கள். இன்று இருப்பதைப்போல என்றும் இணைந்து ஒன்றாக உடன்பட்டிருங்கள். ஒருபோதும் முரண்பட்டு விடாதீர்கள். நீங்கள் ஒன்றுபட்டிருந்தால் கடலால் சூழப்பட்ட இந்த உலகம் உங்கள் கையிற்றான் இருக்கும். இது முற்றிலும் உண்மை. பொய்யானதன்று.

நெஞ்சம் விரும்பிய ஒருமைப்பாட்டை, கண்ணாரக் கண்ட புலவர், குற்றங்களற்ற தமிழால் அவர்களை வாழ்த்தி விடுகின்றார்.

அருகருகாக இருக்கும் நாடுகள் பகை கொண்டிருத்தல் ஆகாது. மக்கள் அனைவரும் நலமோடு வாழவேண்டுமானால், அரசுகள் மனமொத்து இயங்க வேண்டும். எமக்கிடையே பிளவுகள் இருந்தால் தூரத்துப் பகைவர்கள் எம்மிடையே புகுந்து எம்மை அழித்து விடுவார்கள். ஒன்றாக இருந்தால் எம் வலிமை பெருகும். எதிரிகள் பணிவர். உலகமே எங்கள் வசப்பட்டுவிடும் என்ற கருத்து இப்பாடலில் இழையோடுகின்றது.

போர்க்களங்களில் தமிழர் புலப்படுத்திய வீரத்தைப் பாடிய புலவோரே, யுத்தங்களற்ற வாழ்வு வேண்டும் எனப் பாடியிருக்கின்றனர். எல்லா ஊரும் எமது ஊர், எல்லா மக்களும் நம் உறவினர் எனக் கூறியிருக்கின்றனர்.

அமைதி நிலவுகின்ற நாட்டிலேதான் ஆக்க வேலைகள் இடம்பெறும். தொழில் வளர்ச்சி காணும். பஞ்சம் ஏற்படாது. மக்கள் மகிழ்வோடு வாழ்வர். அமைதியான காலத்தில்தான் உயிரும் உடைமைகளும் அச்சுறுத்தல் இன்றி இருக்கும் என்கிறது பதிற்றுப்பத்து பாடல் ஒன்று.

உயிரையும் உடைமையையும் காப்பதற்குப் போராடுதல் ஒன்றே வழி. காலத்தின் வழிப்பட்டு தொடர்ந்து வருகின்ற நெறி. அமைதியை விரும்புகின்ற ஒவ்வொரு இதயமும், அந்த அமைதியைப் பெற போராட நிர்ப்பந்திக்கின்றது நிகழ்கால உலக ஒழுங்குகள்.

வெறிகொண்டலையும் சாத்தான்களின் பாதங்களுக்குக் கீழ் நசுங்கிக் கிடக்கும் சமாதானங்களைப் போல, பொருளற்றுக் கிடக்கின்றன எம் புலவோர் வாக்குகள். ●

# உடுப்பிட்டி மாணவன் தேசிய ரீதியில் கணிதத்தில் முதலிடம்



இலங்கையின் கடந்த வருட ஜி. சி. ஈ உயதர்தர பரீட்சைப் பெறுபேறு கடந்த மாதக் கடைசி வாரத்தில் வெளியிடப்பட்டது. இதில், கணிதப் பிரிவில் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றதன் மூலம் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் பாடசாலை மாணவன் கமலக்கண்ணன் கமலவாசன் சாதனை படைத்துள்ளார். கொம்மந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்த மாணவன், கம்பர்மலைப் பாடசாலையில் ஜி. சி. ஈ சாதாரண தரம் வரை கல்வி கற்று எட்டு திறமைச் சித்தகளுடன் சித்தியடைந்தவர். இவரது தந்தையார் கமலவாசன் டுபாயில் பொறியியலாளராகக் கடயைாற்றுவதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகளில் தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள மாணவர்கள் முதலிடத்தில் வந்துள்ளனர். விஞ்ஞான பாடத்தில் தேசிய ரீதியில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர் ஆனந்தராஜா இண்டாவது இடத்தில் வந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## புதிய பொன்னாடையைக் கண்டுபிடிக்கும் உத்தி!

அது ஒரு பாராட்டு விழா. அதன் நாயகருக்கு மட்டுமன்றி அங்கு பாராட்டுரை நிகழ்த்தியவர்கள், அவரைத் தெரிந்தவர்கள் அனைவருக்கும் பொன்னாடைக் கௌரவம் அமர்க்களப்பட்டது.

ஒவ்வொரு பொன்னாடையும் போர்க்கப்படும் போது அது புதியதா, அல்லது முன்னர் பாவிக்கப்பட்டதா என்பதை முன்வரிசைப் பிரமுகர் ஒருவர் அச்சொட்டாகச் சொல்லி வந்தார்.

அதனைக் கண்டுபிடிக்கும் உத்தியையும் அவரே சொன்னார். "புதியது என்றால் அதனை விரிக்கும்போது உள்ளிருந்து ஒரு இந்தியப் பத்திரிகைக் கடதாசி கழன்று விழும். ஏற்கனவே பாவிக்கப்பட்ட-தாயின் அப்படி எதுவும் உள்ளே இருக்காது" என்றார்.

என்ன ஆராய்ச்சி இது. கலாநிதிப் பட்டம் கொடுக்கலாம் இவருக்கு!

## வங்குறோத்துக்குக் காரணம் புத்திஜிவிகள் இல்லாமை!

ஸ்காபரோவில் இயங்கிவந்த தமிழரின் நிதி நிறுவனம் ஒன்று மூடுவிழா கண்டுள்ளது. பல வர்த்தகப் புள்ளிகள் இணைந்து ஆரம்பித்த நிறுவனம் இது.

வங்குறோத்து (bankrupt) நிலைமைக்குப் போனதால்தான் நிறுவனம் மூடப்பட்டது என்பது தொடர்பாக இதன் முக்கிய புள்ளிகள் இருவர் தமிழ் வானொலியொன்றுக்கு அளித்த செவ்வியில் தம்பக்க நியாயத்தை விளக்கினார்களாம்.

கனடிய தமிழ் புத்திஜீவிகள் போதிய ஆதரவு அளிக்காமையே வங்குறோத்துக்குக் காரணம் என்றவாறு இவர்கள் கூறினார்களாம்.

"இது இப்படித்தான் போகுமென்பது எனக்கு ஆரம்பத்திலேயே தெரியும்" என்று சொல்கிறார் விடயமறிந்த ஒரு புத்திஜீவி. இதற்கு என்ன பதில்?

## அ.தி.மு.கவினர் மகிழ்ச்சி; தி.மு.கவினர் அதிர்ச்சி

கடந்த மாதம் இடம்பெற்ற சனிப்பெயர்ச்சியுடன் இடம்பெற்ற சசிப்பெயர்ச்சியே (சசிகலா அவரது பட்டாளத்துடன் வெளியேற்றப்பட்டது) தமிழ்நாட்டின் பரபரப்பான செய்தி.

சசிகலா வெளியேற்றப்பட்டதால் அ.தி.மு.கவினர் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஜெயலலிதாவைப் பிடித்திருந்த பீடை நீங்கிவிட்டதாக இவர்கள் சொல்கிறார்கள். கட்சியின் முக்கிய பிரமுகர்கள் பகிரங்கமாகவே தங்கள் மகிழ்வை வெளிப்படுத்த இனிப்பு வழங்கியுள்ளனர்.

ஆனால், தி.மு.க வட்டாரமோ இதனால் அதிர்ச்சிக்கு உள்ளாகியிருக்கிறது. நில அபகரிப்புடன் சம்பந்தப்பட்ட தி.மு.க புள்ளிகள் பலர் சசிகலா கும்பல் மூலமே தங்கள் காய்களை நகர்த்தி வந்தனர். கைதாவதிலிருந்து பலர் தப்பியதற்கும் சசிகலா ஆதரவே காரணமாம். இப்போ சசிகலா கும்பலை 'ஜெ' வெளியேற்றி விட்டதால் தங்கள்பாடு இனி 'அரோகரா' என்ற கவலையே இவர்களது அதிர்ச்சிக்குக் காரணம்!

## மகாராணியின் மரணத்துக்கு பி.பி.ஸி செய்தி தயார்!

எலிசபெத் மகாராணியின் மறைவைத் தொடர்ந்து மரணச் செய்தி எவ்வாறு ஒலி/ஒளிபரப்பாக வேண்டும், அவரது வாழ்க்கைக் குறிப்புகளை எவ்வாறு மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதில் பி.பி.ஸி ஊழியர்களுக்கு தீவிர பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

ஆகக்குறைந்தது ஒரு வார கால பயன்பாட்டுக்குத் தேவையான விபரங்கள், சொற்பதங்கள், அவற்றின் உச்சரிப்புகள் ஆகியவைகளில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மகாராணியின் தாயாரின் மரணத்தின் போது விடப்பட்ட தவறுகள் மீண்டும் இடம்பெறக் கூடாதென்ற எச்சரிக்கை காரணமாகவே பி.பி.ஸியில் இந்த முன்னேற்பாடாம்!

## மேடையேறினால் தேசியம்; கீழே இருந்தால் 'வாசி'யம்!

மேடையேறினால் தமிழையும் ஆங்கிலத்தையும் மாறி மாறிப் பேசி குழப்பம் ஏற்படுத்தும் வல்லவரான இவர் ஒரு முன்னாள் நா. உ.

ஸ்காபரோ கந்தசாமி கோவில் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவொன்றில் முன்வரிசையில் அமர்ந்திருந்தார். தேசிய கீதம், தமிழ்க் கீதம், அக வணக்கம் ஆகியன நடைபெற்றபோது அனைவரும் எழுந்து நின்று அதற்குரிய மரியாதை செலுத்தினர்.

ஆனால் இந்த நபர் எழுந்து நின்றவாறு ஒரு பத்திரிகையைக் கையில் வைத்து மிக 'சீரியஸாக' வாசித்துக்கொண்டு நின்றதைப் பார்த்த பலரும் முகம் சுழிக்க நேர்ந்தது.

மேடையேற விட்டிருந்தால் வாய் கிழிய 'தேசியம்' பேசியிருப்பார். கீழே இருந்ததால் தேசியத்தை அவமதித்து வாசிப்பில் லயித்திருந்தார் 'ஐயா'.

## தங்க இளநீர் விலை இரண்டரைக் கோடி ரூபா!

புதையலில் தோண்டி எடுத்ததாகக் கூறி தங்க முலாம் பூசப்பட்ட இளநீரை இரண்டரை கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சி எடுத்த ஒருவர் இப்போது இரும்புக் கம்பிகளை எண்ணுகின்றார்.

போலியான முறையில் தயாரிக்கப்பட்ட இளநீரை தங்க இளநீர் என்றும், அதில் 190 கிராம் தங்கம் இருப்பதாகவும் தெரிவித்து ஏமாற்ற முயன்றவர் இலங்கையில் களுத்துறை தொடங்கொட பகுதியைச் சேர்ந்தவர்.

எப்பாவெல என்ற இடத்தைச் சேர்ந்த இரத்தினக்கல் முதலாளி ஒருவர் ஏமாந்து அதனைக் கொள்முதல் செய்யவிருந்த வேளையில் குட்டு அம்பலமானதால் ஏமாற்றுப் பேர்வழியைப் பொலிசார் கைதுசெய்ய நேர்ந்தது.

**உதாசனன்**
**உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு அமைச்சர் பீட்டர் மக்கே தவறுகள் செய்தாரா?



கனடியப் பாதுகாப்பு அமைச்சரும், பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பரின் நம்பிக்கைக்குரியவருமான பீட்டர் மக்கே மீதான எதிர்க் கட்சியினரின் எறிகணைகள் அதிகரித்து வருகின்றது. கடந்த மாதத்தில் மூன்று தடவைகள் அடுத்தடுத்து அவர் எதிர்க்கட்சிகளின் நெருக்குதலுக்கு ஆளானார். இரண்டு வெளிநாடுகளுக்கு அண்மையில் பயணம் செய்தபோது அங்கு தங்கியிருந்த ஹோட்டல்களுக்குப் பெருமளவு பணம் செலுத்தியதாக ஒரு குற்றச்சாட்டு. எட்மன்டன் நகருக்கு விஜயம் செய்தபோது விமானத்தின் ஒருவழிப் பயணத்துக்கு கட்டணமாக 4,752 டாலர்கள் செலவழித்தது இரண்டாவது குற்றச்சாட்டு. மீன்பிடிப் பயணமொன்றுக்குச் சென்றிருந்தவேளை திரும்புவதற்கு இராணுவ ஹெலிகப்டரைப் பயன்படுத்தியதாக மூன்றாவது குற்றச்சாட்டு, மொத்தத்தில் மக்கள் வரிப்பணத்தைத் தவறான வழியில் செலவு செய்தமைக்காக அமைச்சர் பதவியைத் துறக்கவேண்டுமென எதிர்க்கட்சியினர் வலியுறுததி வருகின்றனர். ஆனால் அரசாங்க தரப்பு அமைச்சர் பீட்டர் மக்கேயுக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டுள்ளது.

## ந. முரளிதரனின் நூல் வெளியீடு

ந. முரளிதரனின் (சுவிஸ் முரளி) கட்டுரைகளின் தொகுப்பான 'தமிழ் மக்களின் நாடு கடந்த அரசியல்' நூல் வெளியீட்டு விழா இந்த மாதம் (ஜனவரி) ஏழாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3:30 மணி முதல் ஸ்காபரோ சிவிக் சென்டரில் நடைபெறவுள்ளது. மேலதிக தகவல்களுக்கு 647 237 3619.



Anthonypillai Jesuthasan

# Ways of the World!

It is often said that some humans are born with 'silver spoons in their mouths'! It is so said when a person is blessed with some luck or a windfall. Be that as it may, it now appears that some animals too are born not with

silver spoons but 'golden spoons in their mouths'.

The Yahoo News of 12th December 2011 reports of a cat named Tommaso in Italy, of having inherited $13 Million from it's wealthy owner named Maria Assunta. Maria, a childless and widowed old lady, rescued Tommaso as a kitten from the streets of Rome a few years back and adopted it to get over her loneliness.

Now in the late evening of her life and failing health, in an apparent show of gratitude for the affection and long companionship afforded by Tommaso, she has made Tommaso the sole beneficiary of her estate. The news story sadly notes the absence of Maria's concern for Stefania, the nurse who took care of her in her final months.

It is further reported that Maria was not the first person to donate millions to a pet. In 2007, hotel billionaire Leona Helmsley had donated $12 million to her white Maltese dog named 'Trouble'.

Fashion Designer Alexander McQueen is reported to have left behind $50,000 for his pets. And going back a long way, in 1931, American heiress Ella Wendel left a will for $24 million to her pet poodle.

The last but not the least to join the "Pet Benefactors Club' (PBC) is the popular queen of TV Talk shows, Oprah Winfrey, who is said to have set aside $50 million to her pet dogs! It is incredible that Oprah, who was born in poverty, abused as a child, experienced severe hardships in early teens and came up the hard way, would care less for the starving millions of children around the world in preference to her dogs!

These are facts of life where many are struggling to find means for the next meal and a few are trying to find ways to spend their amassed wealth. What a contrast where in some parts of the Universe, fellow human beings have no access to doctors or health facilities, basic rights denied, arbitrarily arrested, tortured, jailed, dehumanized and disappeared; whereas in other parts, you find animal hospitals and clinics, special pet foods, animal shelters and associations to protect animals from cruelty, etc.

These are ways of the world! ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# கூம்பும் பருவத்துக் கொக்கு

அலைகள் வந்து மோதும் அழகான கடற்கரை அது. அங்கே மேனி நனைத்துக் கிடக்கின்ற பாறைகள் மீது பெருந்தொகையான நீர்ப்பறவைகள். அவற்றின் மத்தியில்தான் எத்தனை பரபரப்பு' சில கடலில் பாய்ந்து மீன் தேடித் திரும்புகின்றன.

சில நீண்ட சிறகுகளை விரித்துப் படபடக்கின்றன பெருங் குரலோடு' சில ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டுக் கொள்கின்றன அன்போடு. இரை திருட வரும் உறவுகளைக் கொத்திக் கலைக்கின்றன வேறு சில. பாறைகளின் உச்சியில் நின்று அலகு தேய்க்கின்றன இன்னும் சில. காமம் தலைக்கேறப் பேடுகளுடன் கலக்கும் நினைவோடும் அவற்றுள் சில'

எச்சமும் இறக்கையும் நிறைந்த அந்தக் கடற்கரையிலே பட்டுப் போன மரம் ஒன்று' அதன் கிளையிலே ஒரு கொக்கு. அதுவும் பறவைதான். அதுவும் இரைக்காகத்தான் காத்திருக்கின்றது.

ஆனால் அது தலையைத் திருப்பி நான்கு புறங்களும் பார்க்கவில்லை' மரக் கிளையில் அலகு தீட்டவில்லை' சிறகடித்துப் பரபரக்கவில்லை' கூட்டம் சேர்த்துக் கூத்தாடவில்லை' குரல் கொடுத்து தன் இருப்பை அறிவிக்கவில்லை' ஆம்' செத்தது போலத்தான் அதன் இருப்பு இருக்கின்றது வெகு நேரமாக'

திடீரென்று அதன் இறகுகள் விரிகின்றன. மரம் அசைகின்றது' கண்ணிமைக்கும் நேரத்துள் கடலில் குதித்து வேட்டையாடிக் கொண்டு திரும்பவும் மரத்துக்கு வருகின்றது அது' இப்பொழுது அதன் அலகிலே திரட்சியான ஒரு மீன். காலிலே அதைப் பற்றிக்கொண்டு இப்பொழுதுதான் அங்கும் இங்கும் பார்க்கின்றது அது தன் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக'

இரையை உண்பதற்கு முன்னர் இரைக்கு குறிவைக்கும் எதிரிகளை நோட்டம் விட்டு தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்கின்றது அது. மகிழ்வோடு கழுத்தை வளைத்து மீனை உண்டுவிட்டுத் திரும்பவும் செத்தது போல அமைதியாகி விடுகின்றது அது'

இந்தக் காட்சியை வெகு நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தார் திருவள்ளுவர். இந்தக் கொக்கிடம் இருந்து எங்கள் மனித சமுதாயம் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான பாடம் ஒன்று இருக்கின்றதே' மீனைப் பிடிக்காத போது எவ்வளவு அமைதி காத்தது இந்தக் கொக்கு'

பின்பு தன் இரையைக் கண்டதும் எவ்வளவு விரைவாகவும் இரை தப்பிப் போக அவகாசம் கொடுக்காமலும் வேட்டையாடிக் கொண்டது' தனது தேவையில் மட்டுமே அது குறியாக இருக்கின்றதே'

ஓ' மனிதர்களாகிய நாங்களும் செயலில் இறங்காத போது இந்தக் கொக்குப் போல அமைதியாக இருக்கப் பழக வேண்டும். செயலில் இறங்கும் நேரம் வந்து விட்டால் இதைப் போல விரைவாகவும் தோல்வி காணாமலும் சரியாகச் செய்து முடிக்கப் பழக வேண்டும்'

ஒரு செயலுக்குக் கால நேரம் அமையும்முன் படபடத்துக் காரியத்தைச் சிதறடித்து விடக் கூடாது' சரியான தருணம் வாய்க்காத போதில் அவசரப்பட்டு செய்யப் போகும் செயலையும் எம்மையும் இனம்காட்டிக் கொள்ளக் கூடாது'

இதைக் காலம் அறிதல் என்ற அதிகாரத்தில் குறளாகச் சேர்க்க வேண்டும்' வள்ளுவர் மனத்திலே ஆயிரம் எண்ணங்கள்'

கொக்கு ஒக்க கூம்பும் பருவத்து மற்று அதன்
குத்து ஒக்க சீர்த்த இடத்து

கூம்பும் பருவத்து - ஒரு செயலைச் செய்வதற்குரிய காலம் வராத வேளையில்: கொக்கு ஒக்க - கொக்கு அமைதியாக இருப்பது போல இருந்து விடுங்கள்: மற்று சீர்த்த இடத்து - மற்றப்படி செய்து முடிக்க வேண்டிய காலம் வந்து விட்டால்: அதன் குத்து ஒக்க - அது மீனை விரைவாகவும் தப்பிப் போக விடாமலும் கொத்தி எடுப்பதைப் போல சரியாகச் செய்து முடியுங்கள்'

ஒரு செயலைச் செய்வதற்குரிய காலம் வராத வேளையில் கொக்கு அமைதியாக இருப்பது போல இருந்து விடுங்கள். மற்றப்படி செய்து முடிக்க வேண்டிய காலம் வந்து விட்டால் அது மீனை விரைவாகவும் தப்பிப் போக விடாமலும் கொத்தி எடுப்பதைப் போல நீங்களும் எடுத்த காரியத்தை சரியாகச் செய்து முடியுங்கள்' ●

# ஆறு லட்சத்துக்கும் அதிகமான பிள்ளைகள் வறுமைக் கோட்டின் கீழ்

கனடாவில் சுமார் ஆறரை லட்சம் பிள்ளைகள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வசிப்பதாக அண்மைய கணக்கெடுப்பு ஒன்று தெரிவிக்கின்றது. சராசரியாக பத்தில் ஒரு பிள்ளை வறுமைக் கோட்டின் கீழ் இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. புதிய குடிவரவாளர்களின் பிள்ளைகளும் கணிசமான அளவில் வறுமைக் கோட்டின் கீழ் வசிக்கின்றனர். கனடிய பூர்வீக குடிகளின் பிள்ளைகளில் பத்துக்கு நால்வர் என்ற கணக்கில் இவ்வாறுள்ளனர். சுமார் மூன்று லட்சத்துக்கும் அதிகமான பிள்ளைகள் உணவு வங்கியில் தங்கியிருப்பதாகவும் இந்த ஆய்வு தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடையும் நகையும்

புதுவருட தைமகளின் தைத்திருநாள் வாழ்த்துகள்!

குதூகலமான கொண்டாட்டக் காலம். ஆடை அலங்காரம், நகை நட்டு என்று நம்மவர்கள் உசத்தியாய் உடுத்திப்படுத்தி வீடு கோயில் சந்தை உணவகமென்று, தினமும் மூன்றிலொரு பகுதி நேரத்தை வீட்டிற்கு வெளியிலேயே கழிக்கின்ற கலகலப்பான நாட்கள்.

புத்தம் புதிதாக அண்மையில் வெளியான தமன்னா சாறி, நயன்தாரா சாறி, ஸ்ரேயா, திரிஷா, ஜெனலியா, அசின், ஐஸ்வர்யா ராய், ரீமா சென் என்று, அடுக்கடுக்காய் சேலைகள் வர்த்தகச் சந்தைகளை நிறைத்துக்கொள்ள, எம்புரொய்டரி தொடக்கம் சீக்குவன்ஸ், ஸ்ரோன் வேர்க்ஸ் என்று பல ரகங்கள் நம் வருவாயில் ரகளை செய்கின்றன. நகை வகையறாக்களைப் பற்றி சொல்லவே தேவையில்லை, வண்ணவண்ணக் குவியல்களாய் சிங்கப்பூர், டுபாய், சவூதி அரேபியா, இந்தியா என்று எங்கிருந்தெல்லாமோ வந்து குவியும் தங்க நகைகளோடு கொண்டாட்டக் காலம் உற்சாகமாய்க் கழிகிறது.

அணிகலன்களை அணிவதும், அழகாக உடுத்தி மகிழ்வதும் உறவுகளுடன் இணைந்து கொண்டாடி அக்களிப்பதும் வரவேற்கத்தக்க விடயங்களே. இப்படி உடுத்திப் படுத்தி விருந்துபசார மண்டபங்கள், உறவினர் வீடுகள் அல்லது வெளியில் செல்லும் எமது மக்கள், அவசியம் கவனிக்க வேண்டிய மேலதிக சில விடயங்களில் அக்கறையற்று இருப்பதும், அதனால் அவர்கள் நிரந்தரமாகத் தேடிக்கொள்கின்ற துயரங்கள் குறித்தும் இம்முறை பார்க்கலாம்.

துரதிஷ்டவசமாக இந்த பண்டிகைக் காலத்தில் கனடாவின் காலநிலை எமக்கு சாதகமாக இருப்பதில்லை. என்னதான் விலையுயர்ந்த ஆடையையும் நகைகளையும் அணிந்தாலும், அவை அனைத்தையும் விட விலையுயர்ந்த சொத்து எமது தேகமும் தேக ஆரோக்கியமுமே என்பதை நாம் கருத்திலெடுக்கத் தவறிவிடுகிறோம்.



குயின்ரஸ் துரைசிங்கம்

# திருந்துவரா நம்மவர்?

கோடை கால விழாக்களும் கொண்டாட்டங்களும், எமது அழகிய உடைக்கும் நகைக்கும் சாதகமான ஒரு காலநிலையில் வருவதனால், அப்போது நாம் விரும்பியபடி ஜனரஞ்சகமான உடையுடுத்தி ஜமாய்க்கலாம்.

ஆனால் குளிர்காலத்தின் காலநிலை அத்தகைய சாதக சூழலை எமக்குத் தருவதில்லை. அதனால், பெண்கள் அணிகின்ற புதுரக உடைகள் பலவும் கழுத்து, இடுப்பு, காது, முள்ளந்தண்டு போன்றவை உட்பட உடலின் பல முக்கிய பகுதிகளை மறைக்கத் தவறுவதால், அந்த உடைகளுக்கு மேலே உரிய தடித்த குளிர்காப்பு உடைகளை அணிந்து, சில நிரந்தர நோய்களை உள்வாங்கிக் கொள்ளக்கூடிய முக்கிய உடற் பகுதிகளை மறைக்கத் தவறும் பட்சத்தில், கடும் குளிர் அப்பகுதிகளை நேரடியாகத் தாக்கி மோசமான பின்விளைவுகளை உருவாக்கி விடுகின்றன.

முள்ளந்தண்டில் குளிர் பிடிப்பதனால் பல்வேறு கொடிய உபாதைகளுக்கும் நோய்களுக்கும் நாமே வழிசெய்து கொடுக்கிறோம். பின்கழுத்து, காது, இடுப்பு போன்றவற்றில் கடும் குளிர் நேரடியாகத் தாக்கும்போதும், இதுபோன்றே நிரந்தர பாதிப்புக்களை நாம் அனுமதித்து விடுகிறோம்.

பண்டிகைக் காலத்தை குதூகலமாய்க் கழிப்பதொன்றும் தவறல்ல, அதைத் தவிர்க்கும்படி சொல்வதும் எமது நோக்கமல்ல. ஆனால், கடும் குளிருக்கு மத்தியிலும், கழுத்திலுள்ள புதிய நகையையும், கடந்த வாரம் வாங்கிய தமன்னா சேலையையும், பனிமழை மலையாகக் கொட்டினாலும், கதைக்க முடியாமல் வாயும் பல்லும் அச்சு அடித்தாலும், உச்ச உறைபனி ஊசிபோல் உடலைத் துளைத்துத் துன்புறுத்தினாலும், நான் என் தமன்னாவைக் காட்டியே தீருவேன் என்று அடம்பிடிப்பது அவசியம் தானா?

இதிலும் ஒரு படி மேலே செல்லும் நம்மவர்கள், சாதாரண பலசரக்குக் கடைகள், தமிழ்க் கடைகள் போன்றவற்றிற்குச் செல்லும்போதுகூட, கடும் குளிரிலும் கழுத்து நிறைய நகை அணிந்து குளிராடை அணியாமல் செல்வதும், கதவுக்கு வெளியே கடிதமெடுக்கச் செல்லும்போது கழுத்து காது போன்றவற்றை மறைக்கத் தவறுவதும், நம் தலையில் நாமே மண்ணள்ளிப் போடும் பாதகச் செயல்களே.

கடும் உறைபனி மற்றும் அதிக பனிமழை பெய்யும் குளிர் காலங்களில், அதிகாலை ஆலயத்திற்குச் செல்லும் நம்மவர்கள், நன்றாகத் தோய்ந்து, தலைமுடியிலிருந்து தண்ணீர் ஒழுகிக்கொண்டிருக்க, தலையை மூடிக் கொள்ளாமல் வெளியே சென்று காரில் ஏறுவதும், காரிலிருந்து இறங்கி கோயிலுக்கு ஓடிச்சென்று நுழைந்து கொள்வதும், மிக அவசியம் நிறுத்தப்பட வேண்டிய ஒரு பழக்கம்.

குளிர் உடலில் பிடித்து கொடிய வாத நோய்களைக் கொண்டுவந்துவிட, வெறும் பத்து விநாடிகள் போதும் என்கிறார்கள் வைத்திய நிபுணர்கள். தோய்ந்த பின் முடியை உலர்த்திக்கொள்ள வெறும் இரண்டு நிமிடங்கள் போதும். ஊரில் உலர்த்தாமல் ஈரமுடியுடன் கோயில் செல்வதற்காக, இந்தப் பனிப்புலத்திலும் அதைத் தொடர்வது ஆரோக்கியமானதுதானா??

சிந்திப்போம்! ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# அடக்கமும் ஒடுக்கமும்

பண்டைய இலக்கியங்களிலே (திருமந்திரம் உட்பட) செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை போன்ற விடயங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. நிலையாமை பற்றி ஆழப் பேசுபவர்கள் ஜைனர். இதே போல, உடைமைகளும் நிறைய உண்டு. அடக்கமுடைமை, அருளுடைமை, அன்புடைமை, அறிவுடைமை, ஆள்வினையுடைமை, பண்புடைமை, பத்தியுடைமை, முத்தியுடைமையும் வாழ்வுக்கு இன்றியமையாதனவாகும். வள்ளுவப் பெருந்தகை அடக்கம் உடைமையென ஒரு அதிகாரமே வகுத்துள்ளார். உடைமை எனின் சொத்து, பொருள், செல்வமெனப் பொருள்படும். இன்னோர் அர்த்தம் இதற்கு உண்டு. பொருளை உடையவராய் இருத்தல், கல்வியை, செல்வத்தை உடையவராய் இருத்தல் - பொருளும் பொருளுடைமையுமெனப் பொருள் விரிப்பர். தமிழ்மொழி பேசும் மக்களின் வாழ்வியற் தர்மங்கள் பல. அவற்றிலொன்று அடக்கம் உடையவராய் வாழ்தலும், மற்றையோரால் மதிக்கப்படுதலும் மேன்மக்கள் வாழ்வாகும். பழக்கவழக்கம், ஆசார அனுஷ்டானம், விழுப்பம், விழுமியம், ஒழுங்கு, ஒழுகலாறு, மதிப்பு, மரியாதை போன்ற பொருண்மியங்கள் முக்கியமாம். எனவே, தமிழ் மக்களின் இருவகையான பெண்களும் (ஆண்களும்) அடக்க ஒடுக்கத்தோடு வாழ்வது நீண்டகால வாழ்வியற் தர்மங்களாம்.

தங்கத்தைப் பொன்னை உரைத்து, எடை போடுவதுதான் அடக்க ஒடுக்கம். இதைப் பிரித்துப் பார்ப்பதில் ஒடுக்கம், அடக்கமிரண்டும் பெண்களின் இயல்பு வாழ்வின் ஒன்றாய்க் கலந்த ஒரு ஒழுகலாறாகும். அவள் ஒரு அடங்காப் பிடாரி என்று சொல்லும் போது ஒரு பெண்ணின் தரத்தை உரைத்துக் காட்டும் பாணியில் பேசப்படுகிறது. கோபப்படேல், ஆத்திரப்படேல், அவசரப்படேல், வேதனைப்படேல், வில்லங்கப்படேல், பயப்படேல் என நாம் நாளாந்த வாழ்விற் பேசிக் கொள்கிறோம். இவற்றாற் பல பக்கவிளைவுகள் உண்டாகும். அதனால் மனமும் உடையும். கவலை மலியும். இதற்கு எதிர் அமைதி பேணல், பொறுமை காத்தல். அதனாலே தான் வள்ளுவர் அடக்கமுடைமைக்கு முன் உரிமை கொடுத்தார். பொறுத்தார் அரசாள்வார். பொங்கினார் காடடைவர் என்பது பழமொழி. அடக்கம் ஆயிரம் பொன் பெறும் அவசர புத்தியும் அடங்கா முற்கோபமும் அன்பின் பலனைக் கெடுக்கும். சாந்தமும் சற்குணமும் சதாபலனைக் கொடுக்கும். அடக்க ஒடுக்கமான வாழ்க்கை நெறி உயர்ந்தது. சினமடங்கக் கற்றாலும் கீர்த்தி எல்லாம் பெற்றாலும், மனமடங்கக் கல்லார்க்க வாயேன் பராபரமே என்பது தாயுமானவர் கூற்று. புலன் அடக்கம், மன அடக்கம் மனிதத்தின் உயர்வழியாகும்.
ஒன்றாகக் காண்பதே காட்சி - புலன் ஐந்தும் வென்றான்தன் வீரமே வீரமாம் என்பது அவ்வை வாக்கு. எனவே மன அடக்கமும், புலன் அடக்கமும் வாழ்வை உயர்வுடையதாக்கும். இந்திரன் புலனை அடக்காமல் தண்டிக்கப்பட்டான் - ஆக்கத்தின் முதன்மையை அவ்வையார் மூதுரையில் பாடியுள்ளார்.

அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு. (மூதுரை 16)

பொருள்:- கொக்கு நீரணையில் இருந்து பாய்கின்ற தண்ணீரில் ஓடுகின்ற மீன்கள் ஓடிக் கொண்டிருக்க, அவற்றை விட்டு விட்டு, இரையாவதற்கு ஏற்ற பெரிய மீன் வரும் வரையும், செத்தாற் போல் அடங்கியிருக்கும். அது போன்று தக்க சந்தர்ப்பம் வரும் வரையிலும் அடக்கமாய் இருப்பவரை, அறிவில்லாதவர் என நினைத்து அவரை வெல்வதற்கு நினைக்கவும் வேண்டா. நினைப்பின் பெரிய கேடாகும். (மடை - மத்து, அறுதல்- நீங்குதல், உறுமீன் -பெரிய மீன்)

வாழ்வின் ஒவ்வொரு அங்கங்களிலும் அடக்கத்தின் காத்திரத்தை வள்ளுவம் இடித்துரைப்பதை இனி அவதானிப்பாம். முதற்கண் அதிகார வைப்பு முறையில் அடக்கமுடைமை பற்றி இரத்தினச் சுருக்கமாகப் பரிமேலழகர் விளக்குகின்றார். அதாவது மெய் (உடம்பு) மொழி, மனங்கள் தீ நெறிக்கட் செல்லாது அடங்குதல் உடையனாதல்.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.
குறட்பா

அடக்கம் அமரருள் உய்க்கும் - ஒருவனை அடக்கமாகிய அறம் பின் தேவர் உலகத்திற் சேர்ப்பிக்கும், அடங்காமை ஆர் இருள் உய்த்துவிடும் - அடங்காமை ஆகிய பாவம் தங்குதற்குப் பொருத்தமான இருளிலே செலுத்தும்.

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
ஆதனி னூஉங் கில்லை உயிர்க்கு
குறட்பா

உயிர்க்கு அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை. உயிர்கட்கு, அடக்கத்தின் மிக்க செல்வமில்லை. அடக்கத்தைப் பொருளாகக் காக்க - ஆதலின் அந்த அடக்கத்தை, உயர்ந்த உறுதிப் பொருளாகக் காக்க கொண்டு அழியாமற் பாதுகாக்கவும். எல்லாவற்றிற்கும் (எலும்பில்லாத)
இந்த நாக்கே காரணமாதலின் நாவடக்கம் நமக்கு நல்ல வெற்றியை நிட்சயமாக அளிக்கும்.

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு
குறட்பா

தீயினாற் சுட்ட புண் உள் ஆறும். ஒருவனை ஒருவன் தீயினாற் சுட்ட புண் - உடம்பிலே இருந்தாலும் - மனத்திலே அக்கணமே ஆறிவிடும். நாவினாற் சுட்ட வடு ஆறாது. அவ்வாறன்றி கொடிய உரையுடைய நாக்கினாற் சுட்ட வடு என்றுமே அழியாது நீங்காத தளும்பு ஆகும். நாவினாற் சுட்ட வடுவென அதைக் குறிப்பிடுவது உளம் கொளத்தக்கது. எனவே மன அடக்கம் மனிதப் பண்பாகும்.

இந்த அடக்க ஒடுக்கம் சிலரோடு கூடவே பிறந்தது. இவர்கள் அமைதி காப்பர். அதிகம் பேசார். பேசினால் அது பொன்மொழிதான். மற்றவர் மனம் புண்ணாகாமல் மற்றவர் மனத்தைப் புண்படுத்தாமல் வாழும் மனித நேயம் மிக்கவர்கள். மனிதம் மேலானது எனின் அதில் மேலான பண்பு அடக்கம் - மனித அணிகலம் அடக்கம், பொறுமை அமைதி, சாந்தம் என்பன. எனவே ஒவ்வொரு பெண்ணும் ஆணும் அடக்கமாய் வாழ்வோம். நூல்களிலே அடக்கப் பதிப்பு என ஓர் வெளியீடு செய்வர். வாழ்க்கையென்னும் புத்தகம் என்றும் அடக்கப் பதிப்பாய் அமையின் வாழ்வு ஜொலிக்கும் - ஆக நாம் அடக்க ஒடுக்கமாய் வாழ்ந்து காட்டுவோமாக.

(22ம் பக்கம் வருக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனடா சில்லாலை கலாசாரச் சங்க விழா







கனடா சில்லாலை கலாசாரச் சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழாவும் நத்தார் ஒன்றுகூடலும் கடந்த மாதம், பத்தாம் திகதி ஸ்காபரோவில் நடைபெற்றது. மன்றத் தலைவர் திரு. அ. யேசுதாசன் தலைமையில் நடைபெற்ற விழாவில் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் பங்குபற்றி உரையாற்றினார். 'தமிழர் தகவல்' முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் 'உறவுப்பாலம்' பத்தாவது ஆண்டு மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றினார். பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கும் இடையிடையே திருவாளர்கள் ரஞ்சன் பிரான்சிஸ், பி. டபிள்யு. கென்னடி, பேராசிரியர் சந்திரகாந்தன் மற்றும் புதிதாகத் தெரிவான 11வது ஆண்டுக்கான தலைவர் உட்பட பல மதகுருமார்களும் உரையாற்றினர். பல்துறைக் கலைஞர் திரு. எம். ஜேசுதாசன் 'மறை இசை மாமணி' பட்டம் வழங்கி சிறப்புச் செய்யப்பட்டார். (ஒளிப்படங்கள்: ராஜா)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தேசத்தின் குரல்' ஐந்தாவது ஆண்டு நினைவு விழா



## ஈழத்துப்பூராடனாரின் 'வல்வெட்டித்துறைக் கடலோடிகள்'



ஈழத்துப்பூராடனாரின் (கலாநிதி செல்வராஜகோபால்) 'வல்வெட்டத்துறைக் கடலோடிகள்' வரலாற்று ×ல் வெளியீட்டு விழா கடந்த மாதம் 11ஆம் திகதி கனடா கந்தசாமி கோவில் அரங்கில் இடம்பெற்றது. அமரர் அ.சி.விஷ்ணுசுந்தரம் நினைவு மையத்தினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விழாவில் எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்கள் இங்கு இடம்பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழர் தேசிய அவையின் 'மண்வாசனை'








கனடியத் தமிழர் தேசிய அவை, சுனாமியின் ஏழாவது ஆண்டு நிறைவு தினமான டிசம்பர் 26ஆம் திகதியன்று கனடா கந்தசாமி கோயில் மண்டபத்தில் தாயக உறவுகளின் விடியலுக்கான நிதி சேகரிப்புக்காக 'மண்வாசனை' என்ற மகுடத்தில் கலைவிழாவொன்றினை நடத்தினர். இயல், இசை, நடனம், நாடகம் என்றவாறான பல்துறை நிகழ்ச்சிகள் இங்கு இடம்பெற்றன.




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரசித்தி விநாயகர் ஆலய மணவாளக்கோல விழாவும் வருடாந்த கௌரவிப்பு நிகழ்வும்





ஸ்காபரோ சிறீ வரசித்தி விநாயகர் ஆலய 12வது ஆண்டு மணவாளக் கோல கும்பாபிஷேகதின உற்சவமும் வருடாந்த கௌரவிப்பு விழாவும் கடந்த மாதம் நான்காம் திகதி ஆலயத்தில் இடம்பெற்றது. ஆலயப் பிரதம குருக்கள் சிவசிறீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் தலைமையில் கௌரவிப்பு இடம்பெற்றது. மூத்த சைவமதக் குருவான பொன். பஞ்சாட்சரக் குருக்கள், ஆலய முகாமையாளர் மு. சதானந்தன், ஆலயத் தொண்டர் சி. நவரட்ணம், கனடா கந்தசாமி ஆலயத் தலைவர் சு. முத்துராஜலிங்கம், கலைஞர் சீ. கேதீஸ்வரன் (கலகலப்பு தீசன்), கலைஞர் சி. சிறீமுருகன், விவேகா அச்சக முதல்வர் செ. சிறீதரன், 'தமிழன் வழிகாட்டி' செ. செந்திலாதன் ஆகியோர் சிறப்புப் பட்டங்கள் சூட்டி, விருதுப்பட்டயம் வழங்கி மதிப்புச் செய்யப்பட்டனர்.



Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer



Scotiabank®

You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ்

52

உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்

சித்தர் பாடல்கள் சமுதாய சீர்திருத்தத்தை இலக்காகக் கொண்டவை என்பதைப் பார்த்தோம். இன்றும் சமுதாயத்தை சீரழிக்கும் சாதி, சாத்திரம், சடங்கு, சமயம் தீண்டாமை போன்றவற்றைச் சித்தர்கள் கடுமையாகச் சாடியுள்ளனர். மக்கள் சாதி, சாதிக்குள் சாதி எனப் பிரிந்து சண்டையிட்டுக் கிடந்ததை சித்தர்கள் அஞ்சாது கண்டித்தனர்.

மேலும் சித்தர்கள் பல தெய்வ வழிபாடுகளையும் உருவ வழிபாடுகளையும் கோயில், குளம் போன்றவற்றையும் மிகக் கடுமையாக வெறுத்தனர். ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாதவனை ஆயிரம் திருநாமம் பாடி ஆயிரம் வடிவம் கற்பிப்பதை சித்தர்கள் பொய்யென அறிவுறுத்தினார்கள். உள்ளத்தில் உறையும் ஒருவனைக் கோயில் கருவறையில் தேடுவதைப் பார்த்து சித்தர்கள் நகைத்தார்கள்.

சித்தர்கள் அகத்தில் கண்கொண்டு கடவுளை உள்ளத்தில் கண்டு மகிழ்வதே உண்மையான பேரானந்தம் எனக்கருதினர். ஊனுடம்பாகிய ஆலயத்தில் உள்ளமாகிய பெருங் கோயில் சிவனைக் கண்டு தெள்ளத் தெளிந்திருக்க வேண்டும் என வற்புறுத்தினர். மனிதர்கள் அக நாட்டம் கொண்டு, புற வழிபாட்டை வெறுத்து வாழ்ந்தால் சமுதாயம் ஏற்றத்தாழ்வு அற்றதாகிவிடும் என்பதை உணர்ந்தனர். என்னுள்ளே இருக்கும் தேவன்தான் பிற மனிதர்களிடமும் உறைகிறான் என்ற உணர்வு ஏற்படின் அனைவரும் சமம் என்ற உண்மை புலப்படும்.

உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு
ஆலயம்
தெள்ளத் தெளிந்தவர்க்குச் சீவன்
சிவலிங்கம்
வள்ளற் பிரானார்க்கு வாய்
கோபுரவாசல்
கள்ளப்புலன் ஐந்தும் காளாமணி
விளக்கே
(திருமந்திரம்)

எமது மனமே பெரிய கோயில். அக் கோயிலின் கருவறை தசையால் ஆன உடம்பு. அன்பர்களின் குறிப்பறிந்து கொடுத்தருளும் இறைவனுக்கு வாயே கோபுர வாசல். நன்கு அறிந்த ஞானிகட்கு ஆன்மாவே சிவலிங்கமாகும். மனதைத் திருட்டு வழியில் இழுத்துச் செல்லும் ஐந்து புலன்களும் அழகிய விளக்காகும்.

சித்தர்களில் கடும்போக்காளர் எனப் பார்க்கப்படுபவர் சிவவாக்கியார். அவரும் இதே கருத்தைப் பாட்டாகப் பாடியிருக்கிறார்.

நட்ட கல்லை சுற்றி வந்து நாலு புட்பம் சாத்தியே
சுற்றி வந்து மொணமொணென்று சொல்லும் மந்திரம் ஏதடா?
நட்ட கல்லும் பேசுமோ? நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச் சுவை அறியுமோ?

சுட்ட சட்டியும் அதில் வேகுகின்ற கறியைக் கிளறுகின்ற கரண்டியும் அந்தக் கறிச்சுவையை அறியாதது போல, பரம்பொருள் நம் உள்ளத்தே இருக்க அதை அறியாமல் கற்சிலைக்கு நான்கு வகை மலர்கள் சாற்றுவதும் அதைச் சுற்றி வந்து முணு முணுக்கும் மந்திரம் எங்குள்ளது? நட்ட கல் பேசுமோ? பேசாது'

திருமூலர் மற்றும் சிவவாக்கியாரின் கருத்தை ஒட்டிய கருத்தை திருநாவுக்கரசர் தாம் பாடிய தேவாரத்தில் வெளிப்படுத்துகிறார்.

காயமே கோயி லாகக் கடிமன மடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி யிலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய வாட்டிப்
பூசனை யீச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே.

(திருநாவுக்கரசர் - நான்காம் திருமுறை)

இந்த உடம்பையே கோயிலாகவும் உலகியலை நீக்கிய மனம் அடிமையாகவும் தூய்மை உடைய மனமே பரம்பொருள் தங்கும் கருவறையாகவும் இறைவனின் அருட்சத்தியான மனோன் மணியே அவன் இலிங்க உருவமாகவும் அமைய, அடியேனுடைய அன்பே நெய்யும் பாலுமாக அவ்விலிங்க மூர்த்தியை மனம் நிறைவு பெற அபிடேகித்துப் பூசிக்கும் அப்பெருமானுக்கு எங்கள் வணக்கங்களையே நிவேதனப் பொருள்களாகப் படைத்தோம் என்பது இதன் பொருள்.

திருமந்திரத்தைத் தோத்திர பாடல்களாவோ சாத்திரப் பாடல்களாகவோ பார்க்க விரும்பாதவர்கள் அதனை அதன் இலக்கியச் சுவைக்காகப் படிக்கலாம். விளக்கு என்ற சொல்லை வைத்து திருமூலர் எப்படிச் சொல்விளையாடல் செய்கிறார் என்பதற்குக் கீழ்க் கண்ட பாடல் சான்று.

விளக்கைப் பிளந்து விளக்கினை ஏற்றி

விளக்கினுக்குள்ளே விளக்கினைத் தூண்டி

விளக்கில் விளக்கை விளக்க வல்லார்க்கு

விளக்கு உடையான்கழல் மேவலும் ஆமே.

(திருமந்திரம் 2816 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கப் பிளந்து - உடம்பு
விளக்கினை ஏற்றி - உயிர் ஆற்றல்
விளக்கினுக்குள்ளே - மனம்
விளக்கினை தூண்டி - அறிவு

விளக்கில் விளக்கை - ஆன்மா
விளக்குடையான் கழல் - இறை பாதம்

உடல் என்ற விளக்கின் உள்ளே ஒளியாக மற்றொரு விளக்கு உண்டு. அதன் பெயர் ஆன்மா. உடலின் உள்ளே சென்று ஆன்ம ஒளியைத் தூண்டி ஆன்மாவின் மூலம் இறைவனை அறிய முயற்சிப்பவர்கள் இறைவனின் சொரூப நிலையை அடையலாம். விளக்கைத் தூண்டுங்கள் உங்களின் உள்ளே இருக்கும் விளக்கைத் தூண்டுங்கள். இறை ஒளி உங்களில் ஒளிரட்டும்.

(வளரும்)

---

## அடக்கமும் ஒடுக்கமும்...

பொறி புலன்களை அடக்க மனக்கட்டுப்பாடு வேண்டும். சாந்தியும், தன்னடக்கமும் உடையவர்களே மாமனிதர்கள். இவர்கள் கோடியில் ஒருவர். நம் நற்பெயரைக் காக்க அடக்கம் முக்கியமாம். கெட்டவர்கள் என்ற பெயரை ஒரு கணத்தில் பெறலாம். நல்லவர்களென்ற பெயரைப் பெறுவது துர்லபம். தமிழ் இனத்தின் தகைமை அடக்க ஒடுக்கத்தால் வெளிப்படும். பிறர் போற்ற நாம் வாழ்வோம். பிறர் தூற்ற நாம் வாழ்வது மனிதகுலத்துக்கே அவமானமாம். மனிதம் அடங்கா ஆசையை விடுத்து அடக்கத்தைப் பேண நாம் தினமும் உழைப்போமாக. தன்னைத் தான் அடக்குவது மேலான தர்மம். எம் ஆசாரம் அடக்கமே. சாந்தியும் சமாதானமும் நிலைக்க அடக்கம் தேவை.

---





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்



# தமிழனின் உண்மைத் தைப்பொங்கல்!

சாற்றும்மத, சாதி,குலச்
சம்பிரதா யம்விட்டு
வேற்றுமையே அற்றவராய்
மேதினியில் தமிழரெலாம்
இத்தினத்தில் மகிழ்வுடனே
எந்தநாட் டில்இருந்தும்
புத்தாண்டுத் தைமுதல்நாள்
பொங்குகிறோம் தைப்பொங்கல்!

துறந்தே'வில்' ஓரையினை
சூரியனார் போய்நுழையச்
'சுறவம்'எனும் ராசியிலே
சுடரும்அம் முதல்நாளாம்
தைமுதலாம் திகதியிலே
தமிழர்தம் வீடுதொறும்
துய்யமுற்றப் பொங்கலிட்டுச்
சூரியற்குப் படைக்கின்றோம்!

பற்பல நூற்றாண்டாகப்
பரம்பரையாய் அனுபவித்தே
அற்புதமாய் அமைத்துவைத்த
அரியதமிழ்ப் பழமொழியாம்
'தைபிறந்தால் வழிபிறக்கும்'
தாய்மண்ணில் சிலகாலம்
பொய்யாகிப் போனதும்ஏன்?
பொறுத்திருந்து சிந்தித்தால்
தைப்பொங்கல் தத்துவத்தைத்
தமிழர்நாம் மறந்திட்ட
தப்புத்தான் கால்என்று
சரியாகத் தெரிந்திடுவோம்!

"வேண்டுங்கால் மழைதந்து,
வேண்டுங்கால் வெயில்தந்து,
மாண்பார் பருவங்கள்
வழங்கிநல் நெல்விளைத்து,
உண்டிதந் துழவருக்கும்
உண்டித்த துலகினுக்கும்
பண்டிருந் தின்றுவரை
பார்காக்கும் பகலவனே!
நன்றிஐயா உன்றனுக்கு!
நல்லவைகள் தெரிந்தெடுத்தும்
இன்றுனக்குப் பொங்கலிட்டே
இனியவிருந் தளிக்கின்றோம்!
இனியும்எமக் கருள்புரிவாய்!"
என்றுள்ளங் கள்உருகிக்
கனிந்துவழி பட்டுவந்த
கடவுள்குண நன்றிவிட்டோம்!
நன்றிசொல்லி, நன்றிசொல்லி
நாம்வாழ்ந்த காலம்போய்
நன்றிகொன்று நன்றிகொன்று
நாம்தாழுங் காலமிது!

நாய்க்குலத்துக் கும்உள்ள
நன்றியுணர் வற்றோராய்
பேய்க்காட்டுப் புலுடாக்கள்
பிறப்பிடங்க ளாகிவிட்டோம்!
தமிழினத்தை வாழவைக்க,
தமிழ்மண்ணை மீட்டியத்
தமதிளமைச் சுகங்களோடு
தமதுயிரும் இறைகொடுத்த
இளசுகளின் தியாகத்தை
எடுத்துவாய் முழங்கிநிற்க,
களவு,கள வாய்ப்பதவிக்
கதிரைகளைக் குறிவைத்துட்
சண்டைகட்கு வித்திட்டுத்
தமிழினத்தைச் சிதறடிக்கும்
சண்டாளர், நன்றிகெட்ட
தமிழர்நாம் இன்று!அதனால்
கடந்தபல ஆண்டுகளாய்க்
கண்டோம்அப் பழமொழியும
தடம்புரண்டு, தைபிறந்தும்
வழிபிறவாத் தன்மையினை!

நன்றிசொல்லும் நடத்தைதன்
குறியீடே நம்பொங்கல்!
இன்றுலகம் ஈழத்தார்
இடர்நிலைமை கண்டிடவும்,
எம்மின்ன லைக்களைந்தே
எமைக்காக்க முற்படவும்
மும்முரமாய் நிற்கவைத்து,
முழுதாகத் தமையழித்த
அரைலட்சம் அரும்புகட்காய்
அகங்கசிந்து நன்றிசொல்லி,
அரிதாக அவர்தந்த
அகிலஅனு தாபத்தை
முறையாகப் பயன்படுத்தி
முகம்ஒன்றே கொள்ளினமாய்
அறம்பேணி, அறங்கேட்டு
அன்னைமண் மீட்டந்தக்
கார்த்திகைப்பூச் செல்வங்களின்
கனவுகளை நனவாக்கிப்
பார்த்துமகிழ்ந் தெங்கள்இனம்
பரம்பொருட்கு நன்றி சொல்லும்
மெய்த்திருநாள் வந்தபின்பு
மேற்கொள்ளு கின்றஅந்தத்
தைத்திருநாட் பொங்கல்தான்
தமிழன்மெய்த் தைப்பொங்கல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario. MIK 5J8**
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)


**(416) 266 5161**

Main Square Dental Office

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5

**Dr. Shan - Thursday (morning)**
**Dr. Yao San (Tue, Fri & Sat**
**Dr. Brian (monday)**
**Dr. May (wednesday)**

**(416) 690 0121**



# Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Est. 1991

www.computek.edu

We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome

**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

- Living Expenses
- Transportation
- ChildCare
- Books
- Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்













- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Counsellor

**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**

Funeral Counsellor

**416-431-3600** Ext:2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# AB LEGAL SERVICES
## Professional Corporation

**Kauvsegan.E**
Accident Benefit Specialist

204-80 Corporate Drive, Toronto, ON. M1H 3G5
**Tel: 416 290 6200 Fax: 416 290 6201**
email: info@ablegalspc.com
www.ablegalspc.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# FIFA CLUB உலக கிண்ணக் கால்பந்து World Cup Club Championship



ஜப்பானில் எட்டாவது FIFA CLUB உலக கிண்ண கால்பந்து தொடர் நடந்தது. இதில் (18.12.2011) நடந்த இறுதி போட்டியில் பார்சிலோனா vs சான்டோஸ் அணிகள் மோதின.

நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் பார்சிலோனா அணி அல்சாத் அணியை எதிர்த்துப் போட்டியிட்டது. விளையாட்டின் இறுதியில் பார்சிலோனா அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த அணியின் வீரர்களான அட்ரியனோ செய்டோயு மற்றும் மேக்ஸ்வெல் தலா ஒரு கோல் அடித்தனர். இதனையடுத்து பார்சிலோனா அணி இறுதி போட்டிக்கு முன்னேறியது.
FIFA CLUB உலக கிண்ணக் கால்பந்து தொடர் நடக்கும் ஜப்பானின் டொயோட்டோ மைதானத்தில் (14.12.2011) நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதன் அரையிறுதியில் ஜப்பானின் கசிவா ரேசால், பிரேசிலின் சான்டோஸ் அணிகள் மோத இருந்தன.

இப்போட்டிக்கு முன், மதியம் 1.01க்கு (ஜப்பான் நேரப்படி) 4.9 ரிக்டர் அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அங்கு கூடியிருந்த ரசிகர்கள் மற்றும் கால்பந்து வீரர்கள் அதிர்ச்சிக்குள்ளாகினர். பின் போட்டி வழக்கம் போல் நடந்தது. இதில் சான்டோஸ் அணி 3-1 என்ற கோல் கணக்கில் கசிவா ரேசால் அணியை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது.

இறுதிப் போட்டியின் தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு 17வது நிமிடத்தில் லியோனல் மெஸ்சி முதல் கோல் அடித்து நம்பிக்கை அளித்தார்.
தொடர்ந்து அசத்திய பார்சிலோனா அணியின் சேவி (24வது நிமிடம்), பேப்ரிகாஸ் (45வது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோல் அடித்து கை கொடுத்தனர்.

இதற்கு சான்டோஸ் அணியினரால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில் பார்சிலோனா அணி 3-0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியிலும், பார்சிலோனா வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, சான்டோஸ் அணியின் கோல் அடிக்கும் முயற்சி தடுக்கப்பட்டது.

ஆட்டத்தின் 82வது நிமிடத்தில் பார்சிலோனா நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்சி மீண்டும் ஒரு கோல் அடித்தார். ஆட்டநேர முடிவில் பார்சிலோனா அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக (2009, 2011) சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

இத்தொடரின் சிறந்த வீரருக்கான தங்கப் பந்து (Golden Ball) விருதை பார்சிலோனா அணியின் லியோனல் மெஸ்சி தட்டிச் சென்றார். ●

ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்
S.P. Importers





Fresh Fish & Meat
2853 Lawrence Ave. East
Scarborough
416 261 4737

Furniture & Mattress
2859-2861 Lawrence Av. E.
Scarborough
416 266 3077

Grocery & Vegetables
2863 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

Video & Audio
2865 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R & S AUTO SALES

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட

வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

35 வருட அனுபவம்



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற

Radha

R & S Auto Sales Inc.
Radha Motor Inc.

3030 Markham Road
Scarborough, ON

416-412-3838
416-836-5825


## மார்பக புற்றுநோய்க்கு புது மருந்து கண்டுபிடிப்பு

மார்பக புற்றுநோய்க்கு புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

உலகில் லட்சக்கணக்கான பெண்கள் மார்பக புற்றுநோயால் அவதிப்பட்டு வருவதால் இந்த நோயை குணப்படுத்த விஞ்ஞானிகள் மருந்து தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு உள்ளனர். அமெரிக்காவின் ஜார்ஜியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சர்வதேச நிபுணர்கள் குழுவினர் இந்த மருந்து தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது அந்த பணி முடிந்து விட்டதால் அதை எலிகளின் உடலில் செலுத்தி பரிசோதிக்கப்பட்டது. அதன் மூலம் அந்த ஊசி மருந்து மார்பக புற்றுநோயை மட்டுமின்றி, கணைய புற்றுநோயையும் குணப்படுத்தக் கூடியது என கண்டறியப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து அந்த மருந்தை மார்பக புற்றுநோயால் பாதித்த பெண்ணின் உடலில் செலுத்தி பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது. இது சோதனைக்கூட அளவில் உள்ளது.

இந்த மருந்து 90 சதவீத மார்பக புற்றுநோயை குணப்படுத்துவது கண்டறியப்பட்டது. எனவே முற்றிலும் நோயை குணமாகும் வகையில் 2013ம் ஆண்டு இறுதிக்குள் மருந்து தயாரிக்கப்படும் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

## ஒன்ராறியோ, கியுபெக் முதமைச்சர்கள் கடைசி இடத்தில்!

ஒன்ராறியோ மாகாண முதலமைச்சர்களின் மக்கள் செல்வாக்குத் தொடர்பாக அன்கஸ் றீட் நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பொன்றில் ஒன்ராறியோ முதல்வர் டால்ரன் மக்கன்ரியும், கியுபெக் மாகாண முதலமைச்சர் ஜோன் சாறேயும் கடைசி இடத்துக்கு வந்துள்ளனர். சச்கச்சுவான் முதலமைச்சர் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்று முதலிடத்துக்கு வந்துள்ளார். இவருக்கு அடுத்தததாக நியுபவுண்லாந்து முதலமைச்சரும், அடுத்தடுத்த இடங்களுக்கு அல்பேர்ட்டா முதலமைச்சரும், பிரிட்டிஷ் கொலம்பியா முதலமைச்சரும் வந்துள்ளனர்.


HERITAGE
Education Funds

RESP
SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS
A GREAT GIFT FOR
YOUR FUTURE GENERATIONS


உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX
PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"THINKING OF BUYING OR SELLING"

**Residential and Commercial Buying / Selling & Leasing**

DIAMOND CLUB AWARD - 2010

GOLD CLUB AWARD - 2009

*Thanks to all my clients for their continuous support & a special thanks to all of my first time buyers*



**Raja V.S. Rajagopal**
Sales Representative
**Dir : 416.727.8647**
Email: sinnahrajagopal@gmail.com

Make the Right Move, at the Right Time, with the Right Professional

**HomeLife /Future Realty Inc.,**
Brokerage*
205-7 Eastvala Drive, Markham Road, Ontario L3S 4N8
**Bus.: 416.264.0101**
Fax : 905.201.9229
*Independently Owned and Operated, REALTOR



எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

61

2011 ஆம் ஆண்டுக்கு விடைகொடுத்து 2012ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் நாம் புதிய ஆண்டில் பழைய அனுபவங்களைக் கொண்டு புதிய வழிமுறையை சரியான முறையில் அமைக்க முடியுமென்பது பொதுவான கருத்து. இந்த அடிப்படையில் நாம் வெள்ளிப்பணத் தொடரில் 2011ஆம் ஆண்டின் வருமானவரிப் பத்திரம் சமர்ப்பிக்கும் காலம் இந்த வருடம் தை மாதத்திலிருந்து சித்திரை 30ஆந் திகதி வரையாகும். எனவே, இதனைப்பற்றி சில தகவல்களைப் பரிமாறுவது இம்மாதத் தொடரில் பொருத்தமாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

வருமானவரிப் பத்திரப் பூர்த்தி செய்வதற்கு முன்னேற்பாடான விடயங்களாக நீங்கள் சில விடயங்களைக் கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகின்றது.

* இவற்றில் முதலாவதாக நீங்கள் 2011 ஆம் ஆண்டு முகவரி மாறியிருந்தால் அதனை நீங்கள் உங்கள் வருமானவரி பூர்த்தி செய்பவரிடம் தெரியப்படுத்தல் வேண்டும். காரணம் வருமானவரி பூர்த்தி செய்பவரிடம் பழைய முகவரி தகவல்தான் இருக்கும்.
* அடுத்த நிலையாக உங்கள் குடும்பத்தில் புதிய குடிவரவாளர் யாரும் வந்திருந்தால் அல்லது இளம் தம்பதிகளாக இருந்தால் குழந்தை பிறந்திருக்கலாம் - அவற்றையும் நீங்கள் வருமானவரிப் பத்திரம் பூர்த்திசெய்பவருக்கு தெரியப்படுத்துதல் முக்கியமானதாகும்.
* கூடிய வருமானம் உழைப்பவர்கள் தமது வரிச்சுமையை சட்ட ரீதியான முறையில் குறைப்பதற்கு RRSP திட்டம் இருக்கிறது. இதனைப்பற்றித் தெரிந்திருக்காதவர்கள் விரைவாக வரி தயாரிப்பாளரைத் தொடர்புகொண்டால் நன்மை பெறமுடியும். குறிப்பாக மாசி மாதம் 28ஆந் திகிதிக்கு முன் தொடர்புகொண்டு ஆலோசனையைப் பெற்றால்தான் நன்மை உண்டு. காரணம் 2011ஆம் ஆண்டு வருமான வரிக்குரிய RRSP சேமிப்புத் திட்டத்திற்கான கடைசிநாள் பங்குனி மாதம் முதலாந் திகதியாகும்.
* நீங்கள் விற்பனைப் பிரதிநிதிகளாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையில் தொழில்புரிபவராகவோ இருந்தால் குறிப்பிட்ட சில வகையான செலவினங்களை உங்கள் வருமானத்துக்கு எதிராக கழித்துக்காட்ட முடியும். இதனைப் பற்றிய மேலதிக விபரங்களுக்கு உங்கள் வரி தயாரிப்பாளரிடம் செல்லுங்கள்.
* இதே போன்றுதான் மாணவர்களுக்கும். குறிப்பாக பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி மாணவர்களும் தாம் செலுத்திய கல்விக்கட்டணம் பற்றிய சலுகைகளை அறிதலும், ஆலோசனை பெறுதலும் முக்கியமாகும்
* முதியவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய வரிச்சலுகைகள் பல, குறைந்த வருமானம் உடையவர்கள், கூடிய வருமானம் உடையவர்கள், வருமானம் இல்லாதவர்கள் என பல்வேறுபட்டவர்களுக்கும் வேறுபட்ட வகையில் நன்மைகள் உண்டு.
* எக்காரணம் கொண்டும் எவரும் வருமானவரிப் பத்திரம் பூர்த்தி செய்வதனை காலம் தாழ்த்தி செய்வது புத்திசாலித்தனமாகாது. குறைந்த வருமானம் உடையவர்கள், மற்றும் நடுத்தர வருமானம் உடையவர்கள் நேரகாலத்துடன் வருமானவரியை பூர்த்திசெய்யும்போது வரி மீள்பெறுகை (Refund) இனைப் பெறமுடியும். கூடிய வருமானம் உடையவர் சிலவேளை மேலதிகமாக வரி செலுத்த வேண்டியிருந்தாலும் அதனை சித்திரை 30ஆந் திகதிக்கு முன்பு செலுத்தினால் மேலதிகமாக தண்டப்பணம் கட்ட வேண்டிய நிலையைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

நடைமுறையில் பலர் வரி மீள்பெறுகைப் (Refund) பணத்தினை எதற்கு செலவு செய்யவேண்டுமென்பதை ஏற்கனவே தீர்மானித்து வைத்திருப்பவர்களும் உண்டு. அவர்களுக்கு இத்தகைய அறிவுரைகள் பொருத்தமற்றதாக இருந்தாலும் சிலருக்காவது இந்த தகவல் பயன்படும் என்கின்ற நோக்கில் உங்களுடன் பரிமாறிக்கொள்ளப்படுகின்றது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TAMILSYELLOWPAGES.COM

பிறந்த நாள் முதல் இறந்த நாள் வரை உங்கள் அனைத்துச் சேவைகளையும் பூர்த்தி செய்வதற்கும்

உங்கள் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான தொப்பி முதல் பாதஅணிவரை அனைத்துத் தரமான பொருட்களை குறைந்த விலையிலும், துரிதமாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய வர்த்தக WEB SITE

Mobile: 416-752-4444
Tel: 416-644-7273
E-mail: tamilyp@gmail.com

## இரத்தக் குழாய்கள்..

உங்களுடைய குடும்ப வைத்தியர் மூலமாக உங்களை நன்கு சோதித்து, இரத்தம் முதலியவற்றையும் சோதித்த பின், அவரின் ஆலோசனையையும் கேட்டு, அதற்கேற்ப தேகாப்பியாசத்தை செய்யத் தொடங்கலாம். உங்களுடைய இரத்தாசயத்தின் நிலைமை தெரியாமல், சடுதியாக தேகாப்பியாசம் செய்ய முனைந்தால், சில வேளைகளில் அது மிகவும் ஆபத்தான மாரடைப்பில் முடிய நேரிடும். ஆகவே இந்த ஆலோசனையை மறக்க வேண்டாம்.

கடைசியாக நாங்கள் எங்களுடைய வாழ்க்கை முறையை கொஞ்சம் மாற்றி, வாழ்க்கையில் ஏற்படும் உயர்வு தாழ்வுகளை சமமாக எடுக்கப் பழக வேண்டும். போட்டி போடும் மனப்பான்மையையும், ஆத்திரம் போன்றவற்றையும் மாற்றினால் நல்லது. சிலர் தாங்களே தங்களுக்கு காலவரையறையை நிர்ணயித்து அந்த கால முடிவிற்குள்ளே செயற்பட எத்தனிக்கின்றார்கள். இப்படிச் செய்பவர்கள் கூடிய வேலைகளை குறுகிய நேரத்தில் செய்ய விரும்புகின்றார்கள். அப்படிச் செய்யும் வேளையில் அவர்கள் மிகவும் Stressed ஆக போய்விடுகிறார்கள். இவர்களை Type A Personalits என்று சமூக ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். இப்படிப்பட்ட தன்மை உள்ளவர்கள், கூடிய கொழுப்பை உண்டாக்கும் மற்றத் தன்மைகளோடு காணப்பட்டால், இவர்களுக்கு மாரடைப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. ஆகவே தான் நாங்கள் எங்களுடைய வாழ்க்கை முறையைச் சிறிதளவாவது மாற்றிக் கொள்ள வேண்டும் என்கிறோம். ●

## 310,000 மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்தின் முப்பது வீதம் மீளளிப்பு

ஒன்ராறியோ மாகாணத்தில் இரண்டாம் நிலைக் கல்விக்கு மேலான வகுப்புகளில் கல்வி கற்கும் சுமார் 310,000 மாணவர்களுக்கான 'ரியுஷன்' கட்டண 30 வீத மீளளிப்பு இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது. வருடமொன்றுக்கு 160,000 டாலருக்குக் குறைவான வருமானமுள்ள குடும்பங்களின் பிள்ளைகள், கல்லூரிகளின் மாணவர்களாயின் தலா 750 டாலர்களையும், பல்கலைக்கழக மாணவர்களாயின் தலா 1,600 டாலர்களையும் மீளளிப்பாகப் பெறுவர். இதற்காக மாணவர் எவரும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. ஓசாப் (OSAP) பெறும் மாணவர்கள் அனைவரும் இந்த மீளளிப்புத் திட்டத்தில் அடங்குவர்.

The Children's Education Trust of Canada
offered to the public by

Children's Education Funds Inc.



10 டாலரிலிருந்து ஆரம்பித்து 7200 டாலர்கள் வரை கனடா அரசாங்கம் வழங்கும் நன்கொடையைப் பெற்று (20 வீத Grant) உங்கள் பிள்ளைகளதும் பேரப்பிள்ளைகளதும் கல்வி வாய்ப்பை ஊக்குவியுங்கள்.

சமூக நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்ற

சிவா கணபதிப்பிள்ளை

அவர்களை அழைத்து விபரங்களைப் பெறுக!

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கனகாம்பிகை நகை மாளிகை

இப்பொழுது இரண்டு இடங்களில்

## Kanagaambikai Gold House

### Now in Two Locations

சிங்கப்பூர் மற்றும் துபாயிலிருந்து தருவிக்கப்பட்ட 22K தங்க நகைகள்
ராசிக் கற்கள், நவரத்தின மோதிரங்கள், மற்றும் பழைய நகைகளைப் புதுப்பித்துக்
கொள்ளவும் எங்களிடம் வாருங்கள்!




**மார்க்கம் & எக்லின்ரன்**

3160 எக்லின்ரன் அவினியு கிழக்கு
ஸ்காபரோ, ஒன்ராறியோ
**416 269 7197**

**பிறிம்லி & எக்லின்ரன்**

2613 எக்லின்ரன் அவினியு கிழக்கு
ஸ்காபரோ, ஒன்ராறியோ
**416 269 7198**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

Any Referral Service

**JRB Universal Inc.**

Almost All Services Available

647 289 6164




**R.R. Rajkumar**
B.Com (Hons), M.B.A.

• Credit Counseling • Accounting & Tax Services •

CGA

*THE NAME YOU NEED FOR YOUR BUSINESS*



Phone: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-494-4050
E-mail: nimal@nlraccounting.com

**NIMAL VINAYAGAMOORTHY**

Certified General Accountant

2525 Pharmacy Ave. (Pharmacy & Finch), Toronto, Ontario M1W 2K2

# தமிழ்ப் பெயர்களுக்கு $1000.00 பரிசு!

தனித் தமிழ் பெயர்களுக்கு ஆயிரம் வெள்ளிப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்ற விரும்பும் பெற்றோர்களிடம் இருந்து அதற்கான விண்ணப்பங்கள் கேட்கப்படுகின்றன.

2006 - 2011 ஆம் ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர்கள் மட்டும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம். அதற்கான விண்ணப்பங்கள் யாவும் 2012 தைத் திங்கள் (சனவரி) 10 ஆம் நாளுக்கு முன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்கள் தகுதிபெறும் போது குடவோலை மூலம் பரிசுபெறுபவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவர். விழா நாளன்று நேரில் கலந்து கொள்பவர் மட்டும் பரிசுக்குஉரித்துடையவர் ஆவர். கழகத்தின் முடிவே இறுதியானது. கனடா முருகன் (கந்தசாமி) கோயில் அரங்கில்நடைபெற இருக்கும் தமிழ்ப் புத்தாண்டு 2043, தைப் பொங்கல் மற்றும் திருவள்ளுவர் பிறந்த நாள் விழாவில்(சனவரி 15, 2012 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணிக்கு பரிசு வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவம்

(1) குழந்தையின் பெயர்------------------------------------
(2) பிறந்த நாள்-----------------------------
(3) பிறந்த இடம்-------------------------
(4) தாயாரின் பெயர்-------------------------------------------
(5) தந்தையாரின் பெயர்--------------------------------
(6) முகவரி--------------------------------------------------------
(7) தொ.பே. இல.------------------------------------------

குழந்தையின் பெயரை உறுதிப் படுத்தும் பிறப்புச் சான்றிதழ் (படி) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதில்தரப்பட்டுள்ள தரவுகள் முற்றிலும் உண்மையானவை என இத்தால் உறுதிப் படுத்துகிறோம்.

தாயார் கையெழுத்து-----------------------------------------

தந்தையார் கையெழுத்து.-----------------------------------

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**Secretary,**
**TCWA,**
**56 Littles Road**
**Scarborough,ON M1B 5C5**

தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்
Thamil Creative Writers Association

தொலைபேசி இலக்கம்: 416 281 1165



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# VELU

## Denison Discount Pharmacy

7380 McCowan Road, Unit: 9A, Markham
(McCowan/Denison)
**Phone: 905 479 8999   Fax: 905 479 8885**

**Fenton Discount Pharmacy**
2 Fenton Road, Unit: 5A. Markham.
Phone: 905 948 9110


**Marham Discount Pharmacy**
6055 Steeles Ave., Unit: 123, Scarborough.
Phone: 416 297 4444

**Bur Oak Discount Pharmacy**
20 Bur Oak Ave., Unit: 6, Markham.
Phone: 905 887 9005

**Brampton Hospital Pharmacy**
10095 Bramlea Rd., Unit: 103, Brampton
905 792 9998

**Finch Discount Pharmacy**
3852 Finch Ave.East, Unit: GO1, Scarborough
416 609 2121

SABESAN'S Choice



**தனி மரத்தினாலான நிலம், நிலவிரிப்பு**
**சுவருடன் இணைந்த அலுமாரிக் கதவுகள்**
**யன்னல், கதவு புதுப்பித்தல்**
ஆகிய வேலைகளில் தன்னிகரற்றவர்
“விருதுபெற்ற தொழிற்றுறை நிபுணர்”

**Laminate, Mirror, Panel, Closet Droos**
**Carpet, Hardwood, Tiles, Granite Flooring**
**Windows + Doors, Kitchen + Bath**
**Renovation or New!**




*Sabesan's Choice*

**416 605 1990**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வா வெற்றிவேலுவின் **HomeLife/Future Realty Inc.**
## முகவர்கள் மதிப்பளிப்பும் வருடாந்த ஒன்றுகூடலும்


















வீடு மற்றும் வர்த்தகச் சொத்துகள் விற்பனையில் முன்னணியில் திகழும் செல்வா வெற்றிவேலுவின் HomeLife/Future Realty Inc. நிறுவன வருடாந்த ஒன்றுகூடலும், சாதனையாளர் மதிப்பளிப்பு நிகழ்வும் கடந்த மாதம் நடைபெற்றது. Hall of Fame Award டிரேஷ் கிருஷ்ணபிள்ளைக்கும், Top Producer of the Year விருது ரூபி தம்பையாவுக்கும், Top Producing Team of the Year விருது சிவா சண்முகநாதன் மற்றும் ஜோய் செல்வநாயகம் ஆகியோருக்கும் வழங்கப்பட்டது. Chairman Club Award ஏழு முகவர்களுக்கு வழங்கப்பட்டது. டிரேஷ் கிருஷ்ணபிள்ளை, ரூபி தம்பையா, சிவா சண்முகநாதன், சுகன் சிவராஜா, சத்தி சிவசுப்பிரமணியம், கிரிஷ் சிவபாதம், சங்கர் மாணிக்கம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BRACE FOR A GREAT SMILE

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

பல் சிகிச்சை நிலையம்

**பல் சிகிச்சையில் சகல துறைகளிலும் எமது சேவை**

## Dr. M. ILLANGO

B.D.S Dip.Orth. (Oslo), General Practitioner Mainly Orthodontics

பற்களை ஒழுங்குபடுத்தும் பல் வைத்தியர்

## Dr. ALI ADIBFAR

D.D.S, M.D, F.R.C.D (C) , Oral Surgeon

## Dr. MEHRAN MOJGANI

D.D.S. Dip. Perio, Gum Specialist

பல் முரசு வைத்திய நிபுணர்

## Dr. JANAKI ILLANGO


B.D.S.

குடும்ப பல் வைத்தியர்

## Dr. TEHCHIN HSIEH

D.D.S

குடும்ப பல் வைத்தியர்




**Scarborough Office**

3852 Finch Ave. E, Units 204, 303

Scarborough ON

**416 • 292 • 7004**

*Moved to new location*

**Brampton/Mississauga**




7920 Hurontario Street, Unit 37

(Hurontario & Steels Ave.)

Brampton ON L6Y 0P7

**905 • 457 • 1700**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை


தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**


628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

## NKS Draperies & Blinds



**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**



- **Vertical blinds**
- **Venetian blinds**
- **Draperies**
- **Curtains**
- **Shutters**

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org